பக்கங்கள்:12
விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 பங்குனி 23 புதன்கிழமை 06.04.2022 கதிர் 152

**இது ரகசியம் அல்ல!**

நேற்றுக் காலையில் நாடாளுமன்றத்தில் இருந்து ஒரு தமிழ் எம்.பி. தொலைபேசி அழைப்பு எடுத்தார்.

"நீங்கள் எழுதிக் கொடுத்த வற்றை சஜித் பிரேமதாஸா அப்படியே ஒப்புவிக்கின்றார்" – என்றார் சிரித்துக்கொண்டே.

2

# அவசரகாலச் சட்ட விதிகள் வந்த வேகத்திலேயே வாபஸ்

## பெரும்பான்மையை இழந்தமையால் வாலைச் சுருட்டியது கோட்டா அரசு



கொழும்பு, ஏப்ரல் 06

கடந்த முதலாம் திகதி அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் பொதுசனப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் தாம் பிரகடனப்படுத்திய அவசரகால நிலைமையை ஐந்து நாள்களுக்குள் நேற்றிரவு திரும்பவும் தாம் வெளியிட்ட மற்றொரு அதிவிசேட வர்த்தமானி மூலம் விலக்கினார் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ.

10

## அரசுக்கு எதிரான போராட்டம் தீவிரம்; பிரதமரின் இல்லம் நேற்றும் முற்றுகை



ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசைப் பதவி விலகக் கோரி நாடளாவிய ரீதியில் போராட்டங்கள் வலுத்து வருகின்றன. இந்தநிலையில், நேற்றும் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் போராட்டங்கள் நடத்தப்பட்டன.

இதேவேளை, கொழும்பு 7, விஜேராமவில் அமைந்துள்ள பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் இல்லத்துக்கு அருகில் திரண்ட ஆர்ப்பாட்டக்காரர்கள்

10

## பெரும்பான்மையை அரசு இழக்கவில்லை

### இப்படிக் கூறுகின்றார் தினேஷ்



நாடாளுமன்றத்தில் அரசு பெரும்பான்மையை இழக்கவில்லை என்று சபை முதல்வரும் அமைச்சருமான தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய அவர்,

10

## கோட்டாபய அரசு உடனடியாக பதவி விலகுவதே சிறந்த வழி

### நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை நீக்குவதற்கான உரிய தருணம் இது என்கிறார் சஜித்



தற்போதைய அரசியல் நெருக்கடி தீர ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும், அரசும் உடனடியாகப் பதவி விலகுவதே சிறந்த வழி என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச நேற்று சபையில் அறிவித்தார்.

மக்களின் நிலைப்பாடும் அதுவாகவே உள்ளது என்றும்

10

## டீசலுக்கு வரிசையில் நின்ற பஸ் ஏறியதில் பயணி பரிதாபச் சாவு!

### புன்னாலைக்கட்டுவனில் சம்பவம்

எரிபொருளுக்காக வரிசையில் நின்ற தனியார் பஸ்ஸின் கீழ் இறங்கி நிலத்தில் அமர்ந்திருந்த பயணி சாரதியின் கவனக்குறைவால் சில்லு ஏறி உயிரிழந்துள்ளார்.

புன்னாலைக்கட்டுவன் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

ஊரெழு கிழக்கைச் சேர்ந்த தர்மலிங்கம் சதீஸ் (வயது 37) என்பவரே

10

## கொட்டகலையில் நேற்று சவப்பெட்டி ஆர்ப்பாட்டம்



அதிகரித்த விலையுயர்வுக்கு எதிர்ப்புதெரிவித்தும், ஆட்சியாளர்களை வெளியேறக் கோரியும் நேற்று கொட்டகலை நகரில் பாரிய ஆர்ப்பாட்டம்

10

## எந்தத் தரப்புடனும் இப்போது பேசுவதற்கு நிபந்தனை அவசியம் என்கின்றது ரெலோ!

இப்போதைய அரசியல் நெருக்கடி சமயத்தில் எந்தத் தரப்புடன் நாம் பேசுவதானாலும் அதற்கு நிபந்தனைகள் விதிக்கப்பட வேண்டும் என்று குறிப்பிடும் ரெலோ அந்த நிபந்தனைகளை விவரித்துமுள்ளது.

இது தொடர்பில் 'எமக்கான நிரந்தரத் தீர்வை உறுதிப்படுத்தும் அரசியல் மாற்றத்தையே நாம் பரிசீலிப்போம் – ரெலோ திட்டவட்டம்' என்ற தலைப்பில் தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) ஊடகப் பேச்சாளர் கு.சுரேந்திரன் விடுத்திருக்கும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

எமது நிரந்தர அரசியல் தீர்வுக்கான காலவரையறையை ஏற்றுக் கொண்டாலே அரசியல் ஆட்சி மாற்றங்களில்

10

## நெருக்கடி நிலை தொடர்பில் சபையில் 2 நாட்கள் விவாதம்



நாட்டின் தற்போதைய நெருக்கடி நிலைமை தொடர்பில் நாடாளுமன்றத்தில் இரு நாள்கள் விவாதங்கள் நடைபெறவுள்ளன.

இன்றும், நாளையும் குறித்த விவாதங்கள் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நேற்று நடைபெற்ற

10

## அங்கஜனும் அரசுக்கு 'குட்பாய்'



மக்களின் இயல்பு வாழ்க்கையை மக்களுக்குப்

10

## கோட்டா அரசுக்கு எதிராக யாழில் நாளை பெரும் கண்டனப் பேரணி

### ஐக்கிய மக்கள் சக்தி அழைப்பு

ஐக்கிய மக்கள் சக்தியின் ஏற்பாட்டில் நாளை வியாழக்கிழமை யாழ்ப்பாணத்தில் மாபெரும் கண்டனப் பேரணி இடம்பெறவுள்ளது.

கோட்டபாய அரசின் காட்டுமிராண்டித்தனமான ஆட்சியைக் கண்டித்தும், அத்தியாவசியப் பொருள்களின் விலை அதிகரிப்பையும், தட்டுப்பாட்டையும் எதிர்த்தும் நாளை காலை 10 மணிக்கு தொல்புரம் வழக்கம்பரை அம்மன் ஆலயத்துக்கு முன்னால் இந்தப் பேரணி ஆரம்பமாகவுள்ளது.

இதில் இன, மத, கட்சி பேதமின்றி அனைத்து மக்களும் ஒன்றுதிரள வேண்டும்

10

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

எனக்கு விளங்கவில்லை. என்ன, ஏது என்று வினவினேன்.

"அதுதான் இன்று (நேற்று) உங்கள் பத்தியிலே 'இந்த வரலாற்று வாய்ப்பைப் பயன்படுத்தி நிறைவேற்றதிகார ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிக்க சஜித் பிரேமதாஸா முயற்சி எடுக்க வேண்டும்' என்று வலியுறுத்தி இருந்தீர்களே. அதை அப்படியே இங்கு நாடாளுமன்றத்தில் வலியுறுத்துகின்றார் சஜித் பிரேமதாஸா" – என்றார் அவர்.

"இல்லை. எனக்கு அவருடன் அப்படி ஏதும் ஊடாட்டங்கள் இல்லை. அந்த எனது பத்தியில் எனது நீண்ட பட்டறிவு அனுபவத்தில் இவற்றைக் குறிப்பிடுகின்றேன் என்ற முத்தாய்ப்புடன்தான் அக்கருத்தை வெளிப்படுத்தி இருந்தேன். அதுதான் யதார்த்தம்" என்றேன் நான்.

"ஆமாம். அது சரிதான்" என ஒப்புக் கொண்டார் அவர்.

அவர் தொலைபேசி அழைப்பைத் துண்டித்துசற்றுநேரத்தில்யாழ்ப்பாணத்திலிருந்து மூத்த தமிழ் ஊடகவியலாளர் ஒருவரின் அழைப்பு வந்தது. அவரும் எனது நண்பரே. என்னுடன் நீண்டகாலம் முன்னர் ஒன்றாகப் பணியாற்றியவர்.

"நேற்று சஜித் பிரேமதாஸவைச் சந்தித்தீர்களா? அவருடன் பேசினீர்களா?" – என்று கேள்வி எழுப்பினார். என்னுடன் ஆசிரிய பீடங்களில் நெருங்கிப் பணியாற்றியவர் என்பதால் எனது செய்தி மூலங்கள் பற்றிய நீள, அகலங்கள், விடயங்கள் அறிந்தவர் அவர்.

"இல்லையே. ஏன் கேட்கிறீர்கள்?" – என்று கேட்டேன்.

"இல்லை. நாடாளுமன்ற அமர்வை 'லைவ்' ஆகப் பார்த்துக் கொண்டிருக்கிறேன். நீங்கள் இன்று உங்கள் பத்தியில் எழுதிய – வலியுறுத்திய – நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறைமை ஒழிப்பு விடயத்தை சஜித் பிரேமதாஸ தன் வார்த்தைகளில் அப்படியே கூறுகின்றார். அதுதான் கேட்டேன்" – என்றார்.

"இத்தகைய விடயங்களைக் கோர்த்துப் பிடித்து, ஊகித்து முற்கூட்டியே கோடி காட்டுவது உங்கள் இயல்பு. அதுதான் நடந்து இருக்கின்றது" என்று தாமே விளக்கமும் சொன்னார்.

அவர் எனக்குப் பக்கத்தில் இருந்து செய்தி எழுதப் பழகி மேலே வந்தவர். அவருக்கு, யுத்த காலத்தில் அப்படி நாங்கள் முன்கூட்டியே முந்திக்கொண்டு கோடி காட்டிய பல விடயங்களைப் பார்த்திருந்து, பங்காற்றிய அனுபவம் உண்டு.

அதேபோல நேற்றைய எனது பத்தித் தகவல் குறித்து ஆஸ்திரேலியா, கனடா போன்ற நாடுகளில் இருந்தும் மூன்று, நான்கு ஆர்வலர்கள் தொடர்பு கொண்டு என் கருத்துக்களை மெச்சினர்.

இந்த வரலாற்று வாய்ப்பை, நாட்டின் அரசியல் முறைமையைச் சீராக்கும் அதிர்ஷ்ட சந்தர்ப்பமாகத் தலைவர்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற எதிர்பார்ப்பு அந்த ஆர்வலர்கள் அனைவருக்கும் அதிகமிருந்தது. அதைத்தானே நேற்றைய என் பத்தியில் நானும் வலியுறுத்தியிருந்தேன்...?

சரி. இனிப் புதிய விடயத்துக்கு வருவோம்.

ஞாயிற்றுக்கிழமை இரவு மற்றைய அமைச்சரவை சகாக்களுடன் சேர்ந்து, தமது நீதி அமைச்சர் பதவியை ராஜினாமாச் செய்த ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி, திங்களன்று ஜனாதிபதி கோட்டாபயவின் கோரிக்கைக்கு அமைய நாட்டின் நிதியமைச்சராகத் தற்காலிக பொறுப்பை ஏற்றுக் கொண்டார். நேற்றுக் காலை நிதியமைச்சர் என்ற முறையில் சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கை தொடர்பான அறிக்கையை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்த அவர், நாட்டின் தற்போதைய நெருக்கடியின் ஆழத்தை – மக்களின் சீற்றத்தத்தை – புரிந்து கொண்டு, நேற்று நண்பகலே புதிதாக பொறுப்பேற்ற நிதியமைச்சர் பதவியையும் ராஜினாமா செய்தார்.

வெறுமனே அவர் நிதியமைச்சர் பதவியை மட்டும் ராஜினாமா செய்யவில்லை, அந்த ராஜினாமாக் கடிதத்தில் பிறிதொரு முக்கிய விடயத்தையும் அவர் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

இப்போதைய நெருக்கடி நிலைமையைச் சமாளிப்பதற்கு நிதி அமைச்சர் பதவிக்கு அல்லது வேறு பொறுப்புக்கு நாடாளுமன்றத்துக்கு வெளியிலிருந்து பொருத்தமான ஒருவரைக் கொண்டுவருவதற்கு ஜனாதிபதி விரும்புவாராயின், அதற்கான இடத்தை அளிக்கும் விதத்தில் எனது (தேசியப்பட்டியல்) நாடாளுமன்ற உறுப்புரிமையை விட்டு விலகவும் நான் தயாராக இருக்கிறேன் எனத் தெளிவாக அக்கடிதத்தில் ஜனாதிபதிக்குக் கோடி காட்டியிருக்கின்றார் அவர்.

இதில் இரண்டு விடயங்கள் கவனிக்கத்தக்கவை.

ஒன்று – தேசியப்பட்டியல் எம்.பி. பதவியை இராஜினாமாச் செய்வதன் மூலம் முழு நேர அரசியலில் இருந்து ஒதுங்க அலி சப்ரி தயாராக இருக்கின்றார் என்பது.

அடுத்தது – யார் ஜனாதிபதியாக இருந்தாலும், யார் பிரதமராக வந்தாலும், யாரின் ஆட்சி தொடர்ந்தாலும், யார் புதிதாக வந்தாலும், சிறுபான்மை இனத்தவரான அலி சப்ரி நீதி அமைச்சராகத் தொடர்ந்தால் தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை விவகாரத்தைக் கையாள்வது இலகுவானதாகவும், சுமுகமானதாகவும் இருந்திருக்கும்.

'வெண்ணெய் திரண்டு வரும் நேரத்தில் தாழி உடைந்த கதை' மாதிரி, தமிழர் தரப்புடன் நீண்டகால இழுபறிக்குப் பின்னர் நேரடியாகப் பேசவும், அரசியல் கைதிகளின் விடுவிப்புக்கான முன்முயற்சிகளை ஆரம்பிக்கவும், சிங்களத்தின் தலைமைப்பீடம் தலையசைக்கும் போது, எல்லாம் குழம்பிப்போய் தடைபட்டுப் போயிருக்கின்றன.

நாட்டின் இந்த அரசியல் குழப்பத்தில் அவர்களின் (கைதிகளின்) விடுதலைக்கான வாய்ப்பு மீண்டும் அருகிப் போய் – அடிபட்டுப் போய் – சிறை வாழ்வு நீளும் ஏதுநிலைகள் தென்படுகின்றன.

நாட்டின் தற்போதைய அரசியல் குழப்பங்கள் முடிவுக்கு வரும்போது, நமது சகோதரர்களான அந்த அரசியல் கைதிகளின் சிறை வாழ்வுக்கும் ஒரு முடிவு கட்டப்பட்டிருக்க வேண்டும்.

இந்த அரசியல் நெருக்கடிகளைக் கையாளும் நம் தமிழ்த் தலைவர்கள் அந்தக் கைதிகளின் விடுதலையையும் முக்கிய விவகாரமாக மனதில் நிறுத்தி, காய்களை நகர்த்த வேண்டும். அது நம் அரசியல் தலைவர்களின் கட்டாயப் பொறுப்பும் கடப்பாடும் ஆகும்.

– மின்னல் –




# பெறுகை அறிவித்தல் (IFB)
## குறித்தொதுக்கப்பட்ட மாகாண அபிவிருத்தி நன்கொடை (PSDG)-2022- வேலைத்திட்டம்
## பருத்தித்துறை நகரசபை

01.தலைவர் உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு, பருத்தித்துறை நகரசபை, வடமாகாணம் தகுதிவாய்ந்த வழங்குநர்களிடமிருந்து அரக்குமுத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விவரிக்கப்பட்ட பொருள் கொள்வனவுக்காக கோருகின்றார்.

02.தேசிய போட்டிக் கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.

03.ஆர்வமுள்ள வழங்குநர்கள் (Suppliers) தலைவர்/செயலாளர் பருத்தித்துறை நகரசபை, (தொலைபேசி: 021 226 3213, fax: 021 226 0233 மின்னஞ்சல்:secretaryucppd@gmail.com) இலிருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் 06.04.2022 இலிருந்து 25.04.2022 வரை மேற்கூறிய இடத்தில் வேலை நாட்களில் காலை 09.00 மணி முதல் மாலை 15.30 மணி வரை கேள்வி ஆவணங்களைப் பார்வையிடலாம்.

04.தேவையான தகுதிகளில் குறிப்பிட்ட பொருள் வகை மற்றும் துறையில் தீவு முழுவதும் பராமரிப்பு, விநியோகம், பொருத்துதல் மற்றும் விற்பனையில் குறைந்தபட்சம் 3 வருட அனுபவம் உள்ளடங்கும். மேலதிக விவரங்கள் கேள்வி ஆவணத்தில் கொடுக்கப்பட்டுள்ளன.

05.ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் தலைவர்/செயலாளர், பருத்தித்துறை நகரசபை எனும் முகவரியில் 06.04.2022 திகதியிலிருந்து 25.04.2022ஆம் திகதி வரை காலை 09.00 மணிக்கும் 15.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.2000.00 (அனைத்து வரிகளும் உள்ளடங்க) செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.

06.கேள்வி இரு பிரதிகளில் (Original and duplicate) சமர்ப்பிக்கப்பட வேண்டும். Original மற்றும் Duplicate பிரதிகள் தனித்தனியாக சீல் செய்யப்பட்ட உறைகளில் முறையே Original மற்றும் Duplicate என்று குறிப்பிடப்பட வேண்டும். இரண்டு உறைகளும் உறையின் மேல் இடது மூலையில் கேள்வியின் பெயர் மற்றும் கேள்வி இல குறிப்பிடப்பட வேண்டும்.

பூரணமாக நிரப்பப்பட்ட கேள்வி ஆவணம் நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ தலைவர்/செயலாளர், பருத்தித்துறை நகரசபை எனும் முகவரிக்கு 26.04.2022 ஆம் திகதி மாலை 15.00 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்பட வேண்டும். இலத்திரனியல் மூலம் அனுப்பப்படும் கேள்விகள் நிராகரிக்கப்படும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது, கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரரின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

07.கேள்விப் பிணை வைப்புத் தொகையானது கீழே அட்டவணையில் காட்டப்பட்டவாறு அமையும்.

08.கேள்வியானது கேள்வி சமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதியிலிருந்து 49 (13.06.2022) நாட்கள் வரையும் செல்லுபடியாகும்.

| இல | கேள்வி எண் | வேலை விவரம் | ஒப்பந்த காலம் | கொள்வனவுக்கான மதிப்பிட்டுத் தொகை (மில் ரூபா) | திறக்கும் திகதியில் இருந்து கேள்வியின் செல்லுபடியாகும் காலம் | வேண்டப்படும் கேள்விப்பிணை | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | பிணை வைப்பு | செல்லுபடியாகும் காலம் |
| 01 | NP/14/41(5)/PSDG/S.L/2022 | வீதி விளக்கு கொள்வனவு (Street Lights) | 01 மாதங்கள் | 0.50 | 49 நாட்கள் | 5000.00 | 11.07.2022 |

09. கேள்விகள் தொடர்பான முன்னோடிக் கலந்துரையாடல் 12.04.2022ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு பருத்தித்துறை நகரசபை தலைமை அலுவலகத்தில் நடைபெறும். ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் அனைவரும் இக் கலந்துரையாடலில் தமது சொந்த செலவில் வந்து பங்குபற்றலாம்.

திரு.யோ.இருதயராஜா, தலைவர்,
உள்ளூராட்சி மன்ற பெறுகைக் குழு,
பருத்தித்துறை நகரசபை.
வடமாகாணம்.
06.04.2022

# 19ஆம் திருத்தத்தை மீளக் கொண்டு வாருங்கள் 20 இற்கு ஆதரவளித்த மைத்திரி கோரிக்கை



அரசமைப்பின் 19 ஆவது திருத்தத்தை மீண்டும் நடைமுறைக்கு கொண்டுவருமாறு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

அரசமைப்பின் 20 ஆவது திருத்தத்தை நீக்கிவிட்டு 19 ஆவது திருத்தத்தை திருத்தங்களுடன் அமுல்படுத்த வேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்தார்.

மேலும் சுதந்திரக் கட்சியின் 14 நாடாளுமன்ற உறுப்பினர்களும் இனிமேல் அரசாங்கத்தை பிரதிநிதித்துவப் படுத்த மாட்டார்கள் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

20 ஆவது திருத்தத்துக்கு மைத்திரிபால சிறிசேன தலைமையிலான சுதந்திரக் கட்சி ஆதரவை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கைக்கான பயணத்தை ரத்துசெய்யும் வெளிநாட்டவர்!

## நாட்டின் அசாதாரண சூழ்நிலை காரணமாக

இலங்கைக்கு சுற்றுலாப் பயணிகளின் வருகையில் பாரிய வீழ்ச்சி பதிவாகியுள்ளது.

நாட்டில் நிலவி வரும் குழப்ப நிலைமைகளால் இவ்வாறு சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை குறைந்துள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நாளாந்தம் இலங்கைக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 4 ஆயிரத்தில் இருந்து 2 ஆயிரத்து 500 ஆகக் குறைவடைந்துள்ளன.

இவ்வாறு வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகையில் ஏற்பட்ட வீழ்ச்சி டொலர் பிரச்சினைக்கும் பாதிப்பை ஏற்படுத்தும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

ஏற்கனவே இலங்கைக்கு வருகை தர பயணச் சீட்டுகளை முன்பதிவு செய்து கொண்ட பல சுற்றுலாப் பயணிகள் அவற்றை ரத்து செய்து கொண்டுள்ளனர் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்த சுற்றுலாப் பயணிகள் மட்டுமன்றி இந்தியர்களும் இவ்வாறு தங்களது இலங்கை பயணத்தை ரத்து செய்துள்ளனர்.

இந்த ஆண்டின் முதல் மூன்று மாதங்களில் இரண்டு லட்சத்திற்கும் மேற்பட்ட சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர்.

இவர்களின் வருகையால் சுமார் 50 கோடியே 30 லட்சம் அமெரிக்க டொலர் வருமானமாகக் கிடைக்கப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஊடக மாநாட்டை பிற்போடுவதாக இலங்கை மத்திய வங்கி அறிவிப்பு

கொழும்பு, ஏப். 06

நேற்று மு.ப 07.30 மணிக்கு வெளியிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த 2022ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க நாணயக் கொள்கை மீளாய்விற்கான ஊடக அறிக்கை பிற்போடப்பட்டுள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

அதற்கிணங்க , நேற்று நடைபெறவிருந்த ஊடக மாநாடும் பிற்போடப்பட்டுள்ளது.

ஊடக அறிக்கை மற்றும் ஊடக மாநாட்டுக்கான அறிவிப்பு திகதி விரைவில் தெரிவிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# கோட்டாபயவை ஆதரித்தமைக்கு மன்னியுங்கள் தெற்கின் பிரபல ஆசிரியர் பகிரங்கக் கோரிக்கை

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு ஆதரவளித்தமைக்காக முன்னணி ஆசிரியர் திஸ்ஸ ஜனநாயக்க மன்னிப்புக்கோரியுள்ளார். விசேட அறிக்கையொன்றை வெளியிட்டுள்ள அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இந்த நாட்டின் குடிமக்களிடம் நான் மன்னிப்புக் கோருகின்றேன். இந்த அரசாங்கத்தை ஆதரித்தமைக்காக நான் ஏமாற்றப்பட்டுள்ளேன். ஜனாதிபதி பதவிக்கு மிகவும் பொருத்தமானவர் என்ற நம்பிக்கையின் பேரில் தானும் பலரு டன் இணைந்து கோட்டாபய ராஜபக்ஷவுக்கு ஆதரவளித்தேன் என திஸ்ஸ ஜனநாயக்க தெரிவித்தார்.

இந்நிலையில், முன்னோக்கிச் செல்லும்போது எந்தவொரு தனிநபருக்கும் அல்லது எந்தவொரு அரசியல் கட்சிக்கும் ஆதரவளிக்கப் போவதில்லை என்றும் நடுநிலைமையுடன் இருப்பேன் என்றும் ஜனநாயக்க மேலும் தெரிவித்துள்ளார்.

# மின்சக்தி அமைச்சரை உடனடியாக நியமிக்குக!

## பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு கோரிக்கை

மின்சாரம் மற்றும் பெற்றோலிய தொழில்கள் நெருக்கடியான சூழ்நிலையில் நிலவுவதால் மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சரை நியமிக்க உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அரசாங்கத்துக்கு ஆலோசனை வழங்கியுள்ளது.

அந்த ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க இதனைத் தெரிவித்துள்ளார்.


# மரண அறிவித்தல்

தோற்றம்
14
06
1969

மறைவு
02
04
2022



## திருவாளர் நவரத்தினசிங்கம் வாகீசன்

{B.Sc. Eng (Hons), ACMA}

சாமியன் அரசடி கரவெட்டியை பிறப்பிடமாகவும் கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட திருவாளர் நவரத்தினசிங்கம் வாகீசன் (B.Sc. Eng (Hons), ACMA) 02.04.2022 அன்று கொழும்பில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை நவரத்தினசிங்கம் (இலங்கை மத்திய வங்கி) மற்றும் வேதநாயகி (இளைப்பாறிய ஆசிரியை) அவர்களின் கனிஷ்ட புதல்வரும், காலம் சென்றவர்களான குரைத்தினம் புஷ்பராணி தம்பதிகளின் அருமை மருமகனும், ரஜினியின் அன்பு கணவரும், யதுஷா, விதுஷன், மிதுஷன் ஆகியோரின் அன்பு தந்தையும், Dr.ஜனகன், சுரேந்திரன் (பொறியியலாளர்), ஜசோதா (USA) ஆகியோரின் அன்பு சகோதரனும், சுபோதினி, யசோதா, விநாயகமூர்த்தி (USA), தர்ஷினி (USA) ஆகியோரின் அன்பு மைத்துனரும், காலஞ்சென்றவர்களான சிவயோகநாதன், ஆனந்தசிகாமணி, சிவக்கொழுந்து மற்றும் தெய்வசிகாமணி, சிற்றம்பலநாதன் ஆகியோரின் அன்பு மருமகனும், காலஞ்சென்றவர்களான தனிகாசலம், பூலோகசிங்கம் மற்றும் விக்னராஜா, செல்வநாயகி ஆகியோரின் அன்புப் பேரமகனும் ஆவார்.

**அன்னாரின் பூதவுடல் இறுதி அஞ்சலிக்காக 06 .04 .2022 புதன்கிழமை காலை 08.00 மணி முதல் கல்கிசை மஹிந்த மலர் சாலையில் வைக்கப்பட்டு தகனக்கிரியைகளுக்காக பிற்பகல் 1.30 மணியளவில் கல்கிசை மயானத்துக்கு எடுத்து செல்லப்படும்.**

இவ் அறிவித்தலை உற்றார் மற்றும் நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு தாழ்மையுடன் வேண்டுகின்றோம்.

**தகவல்:- ந.சுரேந்திரன் (சகோதரன்) - வா. விதுஷன் (மகன்)**


# கிளிநொச்சி, முல்லைத்தீவுக்கு குடிதண்ணீர் வழங்கலும் சிக்கல்

கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் உள்ள நீர் சுத்திகரிப்பு நிலையங்களில் இருந்து மக்களின் நாளாந்த தேவைக்கு ஏற்ற அளவில் நீரை சுத்திகரித்து விநியோகிக்க முடியாத நிலை தற்போது ஏற்பட்டுள்ளது.

இதனால் மேற்படி மாவட்டங்களில் இனிவரும் நாள்களில் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் நீர் விநியோகம் மேற்கொள்ளப்படவுள்ளது என தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் கிளிநொச்சி, முல்லைத்தீவு அலுவலகம் தெரிவித்துள்ளது.

தற்காலிகமாக ஏற்பட்டுள்ள இந்த நிலைமை காரணமாக பொது மக்கள் நீரை சிக்கனமாக பயன்படுத்துமாறும் நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை பொது மக்களைக் கேட்டுக்கொண்டுள்ளது.

# கொழும்பிலுள்ள சூதாட்ட விடுதியில் டொலர் ஒன்றின் பெறுமதி 410 ரூபா

கொழும்பு டி.ஆர். விஜேவர்தன மாவத்தையிலுள்ள சூதாட்ட விடுதியொன்று ஊரடங்கு காலப்பகுதியிலும் செயற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அண்மைய நாள்களில் மேல் மாகாணத்தில் பொலிஸ் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டு, நாடளாவிய ரீதியில் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்ட நிலையில் குறித்த சூதாட்ட விடுதி தொடர்ந்தும் இயங்கியுள்ளது.

வெளியே பொருத்தப்பட்டுள்ள விளக்குகளை அணைத்துவிட்டு, சூதாட்ட விடுதியை வெற்றிக்காக நடத்திச் சென்றுள்ளார்கள் எனத் தெரியவந்துள்ளது.

எனினும், அப்போது அங்கு அதிகளவான மக்கள் இருந்தனர் எனவும், அவர்களில் பெரும்பாலானோர் வெளிநாடுகளில் இருந்து வந்தவர்கள் எனவும் கூறப்படுகிறது.

அன்றைய தினங்களில் அந்த சூதாட்ட விடுதியில் டொலர் ஒன்றுக்கு 410 ரூபா வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# அரிய வகை சிறுத்தை பூனை ஒன்று கிண்ணியா கிணற்றிலிருந்து மீட்பு!



திருகோணமலை கிண்ணியா பிரதேசத்தில் அரிய வகை சிறுத்தை பூனை ஒன்று மீட்கப்பட்டுள்ளதாக திருகோணமலைவனவிலங்குஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்

திருகோணமலை வனவிலங்கு ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளுக்கு கிடைக்கப்பெற்றத் தகவல்களுக்கு அமைய நேற்று முன்தினம் மாலை கிண்ணியா பகுதியில் உள்ள கிணறு ஒன்றில் தவறி விழுந்த இந்த அரிய வகை பெரிய சிறுத்தை பூனை ஒன்றை மீட்டுள்ளனர்.

இந்த அரிய வகை சிறுத்தை பூனை நாட்டில் அழிந்து வரும் இனமாக கருதப்படுகிறது. மீட்கப்பட்ட சிறுத்தை பூனை கிண்ணியா வனப்பகுதியில் விடப்படும் என திருகோணமலை வன விலங்குகள் ஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## இதுவும் இறைமை வெளிப்படுத்தலே!

ஓர் இக்கட்டான நிலையில் வந்து நிற்கின்றது நாடு.

பொருளாதார வீழ்ச்சியின் அகோரத்தை எதிர்கொள்ள முடியாத மக்கள் வீதிகளுக்கு வந்து விட்டார்கள்.

மக்களின் வயிற்றை – வாழ்க்கையை – பற்றிப் பிடித்து எரியும் பட்டினியை, நெருக்கடிகளை, பற்றாக்குறைகளை, தட்டுப்பாடுகளை நீக்க முடியாத அரசு, அவை குறித்தெதுவும் சிந்திக்காமல் தன்னைப் பாதுகாப்பது பற்றிய சிரத்தையில் அலைகின்றது. பாமரனைப் பற்றிச் சிந்திப்பார் யாருமில்லை.

மக்களுக்கு ஏற்பட்டுள்ள சிக்கல்கள், நெருக்குவாரங்கள் போன்றவை சட்டம் – ஒழுங்கு நிலைமையைக் குழப்பி, நாட்டைப் பெரும் களேபரத்துக்குள் ஆழ்த்தும் சூழல் ஏற்பட்டு வருவது கண்கூடு.

யதார்த்தப் புறநிலை உண்மைகளை ஒப்புக் கொண்டு, அவற்றைக் கருத்தில் எடுத்து, ஜனநாயக ரீதியில் சாத்தியமான தீர்வை நோக்கி விரைந்து நகர அரசியல் தலைவர்கள் முன் வரவேண்டும்.

ஜனாதிபதிப் பதவிக்கும், நாடாளுமன்றத்துக்கும் தமது வாக்குகள் மூலம் மக்கள் வழங்கிய இறைமை ஐந்து ஆண்டு காலத்துக்கானது என்பது சட்ட ரீதியானது, வாதத்திற்குச் சரியானது என்பவையெல்லாம் நியாயம்தான்.

ஆனால், தார்மீக ரீதியில் முறையற்றவை என்பதை நாடு முழுவதிலும் வீதிக்கு வந்து மக்கள் நடத்தும் போராட்டங்கள் உறுதிப்படுத்தி நிற்கின்றன.

மக்களின் இறைமை சட்ட ரீயியான தேர்தல்களில் வாக்குகள் மூலம் அளிக்கப்படும் அல்லது வெளிப்படுத்தப்படும் என விவரிக்கும் நாட்டின் மீயுயர் சட்டமான அரசமைப்பும், பிற சட்டங்களும், அளித்த இறைமையைத் தவறாகப் பிரயோகிப்பவர்களை இடை நடுவில் இறைமையை வாபஸ் பெற்று, வீட்டுக்கு அனுப்பும் ஏற்பாடு எதனையும் தெளிவுபடுத்தவில்லை. அந்த இறைமையைப் பெற்றவர், அவர் தேர்வு செய்யப்பட்ட ஐந்து ஆண்டுகளும் மக்கள் தலையில் மிளகாய் அரைத்து, காதில் பூச்சுற்றிச் செல்வதைப் பார்த்துக் கொண்டே மக்கள் வாளாதிருக்க வேண்டும் என்றுதான் சட்டம் சொல்லாமல் சொல்லுகின்றது.

இந்த சட்டத் தவறுதான் அல்லது சட்டத்தின் ஓட்டைத்தான் இன்றைய இந்தப் பெருங் களேபரங்கள், குழப்பங்கள், அமைதியின்மை மற்றும் ஸ்திரமற்ற சிக்கல்களுக்குள் நாடு மாட்டியமைக்குக் காரணம்.

எப்படி மக்களின் ஜனநாயக ரீதியான வாக்களிப்பை மக்களின் இறைமையை வெளிப்படுத்தும் வழி முறையாக சட்டம் ஏற்றுக் கொள்கின்றதோ, அதே போன்று இத்தகைய அசாதாரண சூழ்நிலைகளில், மக்கள் திரண்டு வீதிக்கு வந்து நடத்தும் போராட்டங்கள், அவர்கள் ஏற்கனவே வழங்கிய இறைமையை அவர்கள் மீளப் பெறும் வழிமுறைகளில் ஒன்றாக ஏற்கும் நிலைமை வரவேண்டும்.

சட்ட ரீதியாக இல்லாவிட்டாலும் கூட, ஜனநாயகக் கட்டாயமாக – தார்மீகக் கடப்பாடாக – இதனை ஏற்பதற்கு அரசியல் தலைவர்கள் தாமாக முன்வர வேண்டும்.

அமைதியாக – ஜனநாயக ரீதியாக – மக்கள் நடத்தும் இந்த எதிர்ப்புப் போராட்டங்களை அவர்களின் கருத்தியல் வெளிப்பாடாகக் கவனத்தில் கொண்டு, அவர்கள் முன்னர் வழங்கிய இறைமையைத் திருத்தும் ஏற்பாடாக அங்கீகரித்து, தீர்வை வழங்குவது அரசியல் தலைமைகளின் நீதி, நியாயமான கடமையாகும்.

மக்கள் முன்னர் வழங்கிய இறைமை ஐந்து ஆண்டுகளுக்குரியது எனப் பழைய – கலாவதியான – உளுத்துப் போன – நியாயங்களையும் பல்லவிகளையும் உரைப்பது அல்லது அதில் தங்கி நின்று பிடிவாதம் பிடிப்பது, மக்களை ஜனநாயக ரீதியான இத்தகைய பேரரெழுச்சிப் போராட்டங்களினின்றும் வேறுபட்டு, மாற்றுவழிகள் குறித்து சிந்திக்கத் தூண்டி விடுகின்ற ஆபத்துக்குள் ஆழ்த்தும். ஆட்சியாளர்கள் இதனை மனதில் நிறுத்த வேண்டும்.

# இவ்வாறான ஆர்ப்பாட்டங்களை நான் பார்த்ததே கிடையாது!

## கூறுகிறார் ரணில்



இலங்கையில் தற்போது காணப்படும் மக்கள் எழுச்சி அராபிய வசந்தம் போல உள்ளது. நான் இவ்வாறான ஆர்ப்பாட்டங்களை முன்னர் ஒருபோதும் பார்த்ததில்லை என முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

டைம்ஸ் ஒவ் இந்தியாவிற்கு வழங்கிய நேர்காணலில் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். தொடர்ந்தும் தெரிவித்த அவர் –

நான் இவ்வாறான ஆர்ப்பாட்டங்களை முன்னர் ஒருபோதும் பார்த்ததில்லை, நான் கலவரங்களை, மோதல்களை, மறியல் போராட்டங்களைப் பார்த்திருக்கின்றேன், இது முற்றிலும் வித்தியாசமானது, இது பணவீக்கத்துக்கு எதிரான மக்களின் சீற்றம் வெடிப்பு.

போதியளவு மின்சாரம் இன்மை, சமையல் எரிவாயு இன்மை பெற்றோல் தட்டுப்பாடு போன்றவற்றுக்கு எதிரான மக்கள் சீற்றமிது.

முழு அமைப்பு முறையும் சிதைவடைகின்றது, மக்களால் இனிமேலும் காத்திருக்க முடியவில்லை. நீங்கள் 13 – 15 மணிநேர மின்வெட்டை எதிர்நோக்கும்போது குறிப்பாக இரவில், இது மிகவும் கடினம். ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுபவர்கள். தொழிலாளர் வர்க்கத் தினர் இல்லை, மத்திய தர வர்க்கத்தினர் வாழும் பகுதிகளிலும் ஆர்ப்பாட்டங்கள் இடம்பெறுகின்றன (அங்கேயே ஆர்ப்பாட்டங்கள் ஆரம்பமாகின) இரு பிரிவினரும் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர்.

அருகில் உள்ள சந்தியில் மெழுகுதிரி போராட்டமாக ஆரம்பமானது பின்னர் அவர்கள் மிரிஹானயில் – பெங்கிரிவத்தையில் உள்ள ஜனாதிபதியின் வீட்டுக்குப் பேரணியாகச் செல்லத் தீர்மானித்தனர்.

அரசியல் கட்சிகளை விட இந்த விடயத்தை பொதுமக்கள் கையில் எடுத்துள்ளதே முக்கியமானது. அவர்கள் அரசியல் கட்சிகளை ஒரு புறம் வைத்துள்ளனர். இது அராபிய வசந்தம் போன்ற மக்கள் இயக்கம் போலக் காணப்படுகின்றது.

யார் காரணம் என விவாதிப்பதில் அர்த்தமில்லை, ஒவ்வொருவரும் ஏனையவர்களை நோக்கி விரல்களை நீட்டுவார்கள். நாங்கள் தற்போதைய நெருக்கடியை ஆராய்ந்து அதற்குத் தீர்வைக் காணமுயல்வோம். நெருக்கடி என்ன, அதற்கான தீர்வுகள் என்ன? இதனை எவ்வாறு தீர்ப்பது? துரதிர்ஷ்டவசமாகப் பிரச்சினைகளைத் தீர்க்கும் பழக்கம் இலங்கையர்களிடம் இல்லை, ஆனால் அதற்கான காரணத்தைக் கண்டறிய முயல்வார்கள். இது பலனளிக்கப்போவதில்லை, நாங்கள் பாரதூரமான நெருக்கடியின் மத்தியில் இருக்கின்றோம்.

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்ட சர்வதேச நாணய நிதியப் பிரதிநிதிகளின் ஆரம்ப கட்ட ஆய்வை பாருங்கள். அது வரிகள் குறைக்கப்பட்டமை, உரங்கள் இல்லாதமை தொடர்பாகச் சுட்டிக்காட்டுகின்றது ஆகவே யார் இதற்குப் பொறுப்பு. அந்த குழுவினர் நெருக்கடிக்கான காரணங்களை முன்வைத்துள்ளனர்.

தற்போது நாங்கள் அதனை எவ்வாறு எதிர்கொள்வது? எங்கள் அமைப்பு முறையில் தொடர்ந்து காணப்படும் பிரச்சினைகளே இதற்குக் காரணம் எனத் தெரிவிப்பதை இலங்கையர்களாகிய நாங்கள் நிறுத்த வேண்டும்.

சர்வதேச நாணயநிதியம் விடயங்களை அடையாளம் கண்டுள்ளது. அது எப்படி உருவானது என்பதை விட்டுவிடுங்கள். நிலைமையை எப்படி ஸ்திரப்படுத்துவது, பொருளாதாரத்தை எப்படி முன்னோக்கி நகர்த்துவது எனப் பார்ப்போம், செலுத்தவேண்டிய கடன் மற்றும் தொடர்ந்தும் தாங்க முடியாத கடன்களே இந்த நிலைக்குக் காரணம் என சர்வதேச நாணயநிதியம் தெரிவித்துள்ளது.

பெருந்தொற்று 2019 நவம்பரில் ஆரம்பமாகிவிட்டது. இந்த அரசாங்கம் வரிகளைக் குறைத்த அதே மாதத்தில், இதன் காரணமாகவே எங்களால் வரவு – செலவுத் திட்ட இலக்குகளை அடையமுடியவில்லை. கொவிட் அனைவரையும் பாதித்தது. ஆனால் பல நாடுகள் அதிலிருந்து மீண்டு விட்டன, ஆகவே, நீங்கள் கொவிட்டின் பின்னால் ஒளிந்துகொள்ள முடியாது.

இலங்கையிடம் மோசமான அந்நிய செலாவணி பற்றாக்குறை காணப்படுகின்றது. இவை அனைத்தும் உக்ரைன் பிரச்சினைக்கு முன்னாலும் காணப்பட்டன, உக்ரைன் மோதல் ஆரம்பமான பின்னர் எரிபொருள் விலை அதிகரித்தது. ஆனால் இந்த நெருக்கடிகள் நீண்டகாலமாகக் காணப்பட்டன எனக் குறிப்பிட்டுள்ளார்.

# கேகாலையில் நேற்று பெரும் மக்கள் ஆர்ப்பாட்டம் குடும்பத்துடன் ஹெலியில் தப்பிய அரசியல் புள்ளி!

கேகாலை நிதஹாஸ் மாவத்தையில் நேற்று (செவ்வாய்க்கிழமை) காலை பெரும் எண்ணிக்கையிலான மக்கள் ஒன்று திரண்டு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கேகாலை சுதந்திர மாவத்தையில் ஆர்ப்பாட்டக்காரர்கள் ஒன்று கூடிக்கொண்டிருந்த போது தனியார் விமான சேவைக்குச் சொந்தமான ஹெலிக்கொப்டர் ஒன்று கேகாலை மாநகர சபை மைதானத்தில் தரையிறங்கியுள்ளது.

கேகாலையைச் சேர்ந்த பலம் வாய்ந்த அரசியல்வாதி ஒருவரும் அவரது குடும்பத்தினரும் ஹெலிக்கொப்டரில் அப்பகுதியை விட்டு வெளியேறினார் எனக் கேகாலை பிரதேசவாசிகள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

மேற்படி ஹெலி புறப்பட்டு கண்டி நோக்கி பயணித்ததாக ஆர்ப்பாட்டக்காரர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

கேகாலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கனக ஹேரத்தின் வீடும் கேகாலை நகரசபை விளையாட்டு மைதானத்தை அண்மித்துள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

# ஜனாதிபதி கோட்டா பதவி விலக வேண்டும் கத்தோலிக்க தேவாலயங்கள் கோரிக்கை

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவியை ராஜினாமா செய்ய வேண்டுமென கத்தோலிக்க தேவாலயங்கள் கோரிக்கை விடுத்துள்ளன.

நாட்டின் தற்போதைய பிரச்சினைகளுக்கு அமைச்சரவை மாற்றம் ஒரு தீர்வு அல்ல எனவும், மக்களின் கருத்துக்கு இணங்க ஜனாதிபதி பதவி விலக வேண்டுமெனவும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

ஜனாதிபதி பதவி விலகுவதன் மூலம் மக்கள் புதிய ஒரு தலைவரைத் தெரிவுசெய்து கொள்ள சந்தர்ப்பம் உருவாகும் எனத் தெரிவித்துள்ளது.

நாட்டு மக்கள் ஜனாதிபதியை பதவி விலகுமாறு கோருகின்றனர் எனவும், அமைச்சரவையை மாற்றுவதற்கு இதற்குத் தீர்வாகாது எனவும் கத்தோலிக்க தேவாலயங்களின் தொடர்பாடல் பிரிவு பணிப்பாளர் அருட்தந்தை ஜூட் கிறிஸாந்த தெரிவித்துள்ளார்.

தற்போதைய அமைச்சரவை ஜனாதிபதியின் தலையீட்டினால் செயற்பட்டு வரும் நிலையில் புதிய அமைச்சரவையை நியமித்தாலும் ஜனாதிபதியின் அதே தலையீடு இருக்கும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# மீண்டும் ஆரம்பிக்கப்போகும் சாய்ந்தமருதூர் போராட்டம்!



## ‘அதா’வை நம்பிக்கெட்டது

பல மொழிகள், பல்லினம், பல சமூகம், பல நாகரிகங்கள் என வேற்றுமையில் ஒற்றுமை கொண்ட இலங்கைத் தீவில் முஸ்லிம்களை 100 சதவீதம் கொண்ட ஒரே ஊர் என்றால் அது சாய்ந்தமருது. இந்த சாய்ந்தமருது நகரம் இயற்கையின் அழகினால் ஆசீர்வதிக்கப்பட்ட கிழக்கு மாகாணத்தில் இலங்கையர்களுக்கு அதிகமாக சோறு போடும் மாவட்டங்களில் முன்னிலையில் உள்ள அம்பாறையில் அமைந்துள்ள புராதன நகரங்களில் ஒன்றாகும். வயலும், வர்த்தகமும், கடலும், கல்வியும் என சகல வளங்களும் கொண்ட இந்த நகர் தனக்கான நகர சபையைக் கோரி இரட்டை தசாப்தம் கடந்தும் தவமிருக்கிறது என்பது நாடறிந்த உண்மை.

வந்தவர் போனவரெல்லாம் தங்களின் வீழ்ந்த செல்வாக்கை மீள விளையச்செய்ய சாய்ந்தமருதூர் மண்ணில் உமுத வார்த்தைகளில் முதன்மையானது நகர சபையை பெற்றுத்தருவோம் என்பதே. வாக்குகள் எண்ணி அறுவடை முடிந்து சாக்குகளின் வாய் கட்டுப்பட்டால் காணாமல் போன அரசியல்வாதிகள் அடுத்த தேர்தலுக்கு அதே கோஷத்துடன் வந்து வென்று சென்ற வரலாறுகளே நடந்தேறியுள்ளது. இதில் இந்த அரசியல்வாதியும் விதிவிலக்கல்லர்.

சாய்ந்தமருது பிரதேசம் இற்றைக்கு 124 வருடங்களுக்கு முன்பிருந்தே உள்ளூராட்சி சபையைக் கொண்டிருந்த விடயம் இலங்கை முஸ்லிம்களின் வரலாற்றில் ஒரு வரலாற்றுத் தடயமாகக் காணப்படுகிறது. சாய்ந்தமருது பிரதேசம் ஒரு வரலாற்று பூர்வீகம் கொண்டது என்பது பல ஆதாரங்கள் மூலம் நிரூபிக்கப்பட்ட உண்மை. இலங்கை பிரித்தானியரின் ஆட்சியில் இருந்த காலத்தில் மகாராணியின் பிரதிநிதியான ஆளுநரின் பிரகடனத்தின் மூலம் கிழக்கு மாகாணத்தின் சாய்ந்தமருது உட்பட 5 பிரதேசங்கள் 1897.02.19 ஆம் திகதியிலிருந்து செயற்படத்தக்கதாக சானிடரி சபைகளாக குடியேற்ற செயலாளரால் அரச வர்த்தமானியில் பிரகடனம் செய்யப்பட்டது. 1897ஆம் ஆண்டு பெப்ரவரி 19ஆம் திகதி வெளிவந்த சிலோன் அரசாங்க வர்த்தமானி, அன்றைய குடியேற்ற செயலாளர் ஈ நோயல் வர்கோர் பிரித்தானிய ஆளுநரின் ஆணைப்படி பிரகடனம் ஒன்றை வெளி யிட்டார்.

அந்தப் பிரகடனத்தின் படி 1892 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க ‘சிறிய நகரங்கள் சானிட்டரி கட்டளைச் சட்டத்தின்’ 2 ஆம் பிரிவிற்கு இணங்க சனிட்டரி சபைகள் என்ற அந்தஸ்துடன் கிழக்கு மாகாணத்தின் கிராமங்களான, காத்தான்குடி, ஏறாவூர், சாய்ந்தமருது, கல்முனை, சம்மாந்துறை போன்றன அன்றைய நிறைவேற்று சபையின் ஆலோசனைக்கு அமைய ஆளுநரின் செயலாளர் அவரால் இலங்கை அரசாங்க வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது. சாய்ந்தமருது உள்ளூராட்சி சபை அரசியல் காரணங்களுக்காக, சில அரசியல்வாதிகள் பின்புலத்தில் செயற்பட்டு இல்லாமல் ஆக்கப்பட்டது. 1987ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க சட்டத்தைப் பயன்படுத்தி சாய்ந்தமருது பிரதேசத்தின் அரசியல் அதிகாரம் இல்லாமல் செய்யப்பட்டது மட்டுமல்லாது, இங்கு அரசியல் தலைமைக்குப் பதிலாக அரசியல் முகவர்கள் செயற்பட ஆரம்பிக்கப்பட்ட செயற்பாடு இன்றுவரை தொடர்கிறது. இவ்வாறு எமது தொன்மை மிக்க சபை இல்லாமல் ஆக்கப்பட்டது வரலாற்றுத் தவறு மட்டுமல்ல, இலங்கை முஸ்லிம்களின் வரலாற்றை மறைக்கின்ற செயற்பாடுமாகும்.

இப்படியான சாய்ந்தமருதில் நகர சபைக்கான போராட்டம் பல வருடங்களாக உள்ளார்ந்தமாகப் புகைந்து கொண்டிருந்தது. பல்வேறு காரணங்களை சகித்துக்கொண்டும், சில சிலுசிலுப்புக்களுடனும் இருந்துவந்தாலும் திடீரென உக்கிரமடைந்தது. சாய்ந்தமருதுக்கான தனியான பிரதேசசபையை வென்றெடுக்கும் முகமாக பிரதேச மக்களால் பூரண ஹர்த்தால் முன்னெடுக்கப்பட்டு மக்கள் போராட்டம் உக்கிரமடைந்து இயல்பு நிலை முற்றாகப் பாதிப்படைந்தது. கறுப்புப்பட்டியணிந்த பெருந்திரளான இளைஞர்கள், வயோதிபர்கள் வீதியில் அமர்ந்து தமது சத்தியாக்கிரகத்தை நடத்தினர்.

புரட்சி, எழுச்சியென உக்கிரமடைந்து எழுந்த மக்கள் சக்தி கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் கல்முனை மாநகர சபை, காரைதீவு பிரதேச சபை போன்ற பிரதேசங்களில் தோடம்பழ சின்னத்தில் சுயாதீன அணியாக களமிறங்கி மக்கள் எழுச்சியுடன் மாளிகைக்காடு கிழக்கு வட்டாரத்தைத் தவிர ஏனைய வட்டாரங்களான சாய்ந்தமருதில் 06 வட்டாரங்களையும், மாளிகைக்காடு மேற்கு வட்டாரத்திலும் மக்களின் ஏகோபித்த அரசியல் அதிகாரத்தை ஜனநாயக ரீதியாகப் பெற்றுக் கொண்டனர்.

இதன் மூலம் 10 உறுப்பினர்கள் தெரிவானார்கள். அதனைப் பயன்படுத்தி தனியான நகரசபைக்கான போராட்டத்தில் பல அதிகாரங்களையும், பல்வேறு இழப்புக்களையும் சந்தித்த நிலையில், தனியான நகர சபை என்ற இலக்கிற்காக மாத்திரம் முழுமையாக அர்ப்பணித்து சாய்ந்தமருது தனியான நகரசபைக்கான போராட்டத்தில் மக்களின் ஆணையை உறுதிப்படுத்துவதோடு, தற்போதைய அரசியல் சூழ்நிலையில் சம்பந்தப்பட்டவர்களுக்கு என சில விடயங்களை முன்வைத்தனர். ஆனால் அவைகளெல்லாம் அச்சிட்ட காகிதங்களில் இருந்தனவே தவிர செயற்பாட்டில் இருக்கவில்லை. இதனால் போராட்டத்தின் திசை மாறி தனிநபர் இலாப நோக்கை நோக்கிய பாதையாக சிலரின் தெரிவுகள் இருந்தமையால் ஒற்றுமை சீரழிந்து போராட்டத்தின் பலம் குன்றியது. பின்னாளில் தேசிய காங்கிரஸ் தலைவர் அதாவுல்லாவின் தொடர்புகள் மூலம் ‘நோ போலு’க்கு சிக்ஸ் அடித்தது போன்று கல்முனை உப பிரதேச செயலகம் தொடர்பிலான கூட்டத்தில் சாய்ந்தமருதுக்கான நகரசபைக்கான பழம் நழுவி பாலில் விழுந்தது. தே.காங்கிரஸ் தலைவர் அதாவுல்லா அதற்குப் பதிவைத் தானாக முன்வந்து வைத்தவுடன் அவரூடாகக் கடந்த 2020 காதலர் தினத்தன்று சாய்ந்தமருது பிரதேசத்துக்கு தனியானதொரு நகர சபையை நிறுவுவதற்கான வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்ட அரசாங்கம், ஆறு நாள்களுக்குப் பின்னர், அந்த வர்த்தமானி அறிவித்தலை இரத்துச் செய்ய முடிவு செய்தது.

இதனை வர்த்தமானி வெளிவந்த அந்த தினமே தேசிய காங்கிரஸ் தலைவர் அதாவுல்லா நன்றாக அறிந்திருக்க வேண்டும். ஏனெனில் சாய்ந்தமருது மக்கள் அன்றைய தினம் அவருக்கு வழங்க இருந்த கௌரவ வரவேற்பை அவர் முற்றாக நிராகரித்து கிழக்கு வாசலில் அமைதியாக இருந்துகொண்டார். அன்றே மருதூரின் பலரும் சந்தேஷம் கொண்டதை ஆறுநாள்களின் பின்னர் அமைச்சர் பந்துல உறுதிப்படுத்தினார். புதிதாக உள்ளூராட்சி சபைகளை வழங்க வேண்டிய சகல இடங்களுக்கும், ஒரே நேரத்தில் அவற்றை வழங்குவதற்காகவே இந்த வர்த்தமானி அறிவித்தல் இரத்துச் செய்யப்பட்டதாக, அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் உரையாற்றிய அன்றைய அமைச்சரவைப் பேச்சாளரும் உயர்கல்வி அமைச்சருமான பந்துல குணவர்தன கூறினார்.

சாய்ந்தமருதுக்கான சபை எதிர்காலத்தில் வழங்கப்படும் என்றால், ஏற்கெனவே வழங்கப்பட்டதை ஏன் இரத்துச் செய்யவேண்டும்? வழங்கப்பட்டதை அவ்வாறே விட்டுவிட்டு, ஏனைய சபைகளைப் பின்னர் வழங்கலாமே! ‘இந்தச் சபையை வழங்கியமைக்குத் தெரிவிக்கப்பட்ட எதிர்ப்புகளாலேயே, இவ்வாறு இந்த வர்த்தமானி அறிவித்தல் இரத்துச் செய்யப்பட்டதா?’ என ஊடகவியலாளர்கள் கேட்டதற்கு பதிலளித்த அமைச்சர், இல்லை என்றார். அவ்வாறாயின், வழங்கப்பட்டதைவிட்டுவிட்டு ஏனையவற்றைப் பின்னர் வழங்கலாம். ஆனால், அரசாங்கம் அவ்வாறு செய்யவில்லை. ஏன் எனும் கேள்விக்கு பதில் இப்போது எல்லோருக்கும் முன்னால் தெளிவாக இருக்கிறது.

இலங்கையில் கிராம சபைகள் போன்று உள்ளூராட்சி மன்றங்கள் உருவானதன் பின்னரோ அல்லது 1987 ஆம் ஆண்டில் தற்போதைய பிரதேச சபைகள் போன்று உள்ளூராட்சி மன்றங்கள் உருவானதன் பின்னரோ புதிதாக உருவாக்கப்பட்ட முதலாவது உள்ளூராட்சி சபையே பிரகடனப்படுத்தப்பட்ட சாய்ந்தமருது நகரசபை என்பதைப் போலதான், சில பேரினவாதிகள் அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கின்றனர்.

ஆனால், தனியாக உருவாக்கப்பட்ட முதலாவது உள்ளூராட்சிசபை, சாய்ந்தமருது நகர சபையல்ல. அதற்கு முன்னரும் சில இடங்களில் புதிதாகத் தனித்தனியான உள்ளூராட்சி சபைகள் உருவாக்கப்பட்டுள்ளன. சில இடங்களில், ஏற்கெனவே இருந்த உள்ளூராட்சி சபைகள் தரமுயர்த்தப்பட்டுள்ளன. 1987 ஆம் ஆண்டில் பிரதேசசபைகள் அறிமுகப்படுத்தப்பட்ட போது, அந்தக் காலத்தில் இருந்த நான்கு கிராம சபைகள் ஒன்றிணைக்கப்பட்டே கல்முனை பிரதேச சபை உருவாக்கப்பட்டது. அது பின்னர் நகர சபையாகத் தரமுயர்த்தப்பட்டு, 2001 ஆம் ஆண்டில் மாநகர சபையாகத் தரமுயர்த்தப்பட்டது.

2011ஆம் ஆண்டில், அக்கரைப்பற்று மாநகர சபையின் உருவாக்கமும் மற்றோர் உதாரணமாகும். அப்போது, அக்கரைப்பற்றைச் சேர்ந்த ஏ.எல்.எம். அதாவுல்லாஹ்வே உள்ளூராட்சி அமைச்சராகக் கடமையாற்றினார். அவர் தமது செல்வாக்கைப் பயன்படுத்தி, அங்கிருந்த பிரதேச சபையைப் பிரித்து, மாநகர சபையொன்றை உருவாக்கினார். இதற்கு அக்காலத்தில் ‘கபே’ அமைப்பு எதிர்ப்புத் தெரிவித்தது. பிரதேச சபையொன்று முதலில் நகர சபையாகத் தரமுயர்த்தப்படாமல், நேரடியாகவே மாநகர சபையாகத் தரமுயர்த்தப்படுவது முறையானதல்ல என்பதே அவர்களது வாதமாகியது.

அத்தோடு, அக்கரைப்பற்று பிரதேச சபையிலிருந்து அக்கரைப்பற்று மாநகர சபை பிரித்தெடுக்கப்பட்ட போது, மீதமாக இருக்கும் அக்கரைப்பற்று பிரதேச சபையின் வாக்காளர் எண்ணிக்கை, சுமார் 4 ஆயிரம் எனவும் கபே கூறியது. ஆனால், அந்த எதிர்ப்புகளை மஹிந்த ராஜபக்ஷவின் அரசு பொருட்படுத்தவில்லை. அதற்கு, மஹிந்த தரப்பு ஆதரவு அமைப்புகள் எதிர்ப்புத் தெரிவிக்கவும் இல்லை. அதே அரசில் இருந்தவர்கள்தான், இப்போது சாய்ந்தமருது நகரசபைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கிறார்கள். அப்போது அமைச்சராக இருந்த அதாவுல்லா ஏன் சாய்ந்தமருத்துக்கான சபையை பிரகடனம் செய்யவில்லை எனும் கேள்விக்கு கோமாளித்தனமான பதில்களே அந்தத் தரப்பிடம் இருக்கின்றன.

தனது மக்களின் தாகத்தைத் தணிக்க அடம்பிடித்து அமைச்சரவைக் கூட்டத்திலிருந்து வெளிநடப்புச் செய்த மலையகத் தலைவர் மனோவின் போராட்டம் வெற்றியளித்தது. 2017 முடிவடைவதற்குள், புதிதாக 6 பிரதேச சபைகளுடன் நுவரெலியாவும் அம்பகமுவவும் சேர்த்து எட்டு பிரதேசசபைகள் உருவாக்கப்பட்டன. சாய்ந்தமருத்துக்கு போராட்டங்கள் மட்டுமே மிஞ்சின. இவைகளெல்லாம் இப்படி இருக்க, மருதூரின் கனவை வைத்து அரசியல் செய்தவர்கள் பலரும் இன்று அந்த மக்களால் பாவிகளாகப் பார்க்கப்படுகிறார்கள்.

மு.கா. தலைவர் ஹக்கீம் எழுதிக் கொடுக்க அப்போதைய பிரதமர் ரணில் வாக்குறுதி கொடுத்தார், இத்துறைக்கு பொறுப்பான அப்போதைய அமைச்சர் பைசர் முஸ்தபா நேரடியாக வந்து வாக்குறுதி கொடுத்தார். பஸில், மஹிந்த சாய்ந்தமருதில் வைத்தே உறுதியளித்த சம்பவங்கள், ஹக்கீம், ரிஷாத், அதாவுல்லா என எல்லோரும் இந்த சபையை வைத்து அரசியல் செய்தார்கள், ஹரீஸ் சபை கொடுக்காமல் தடுக்கிறார், கல்முனை மக்கள் சாய்ந்தமருத்துக்கு சபை கொடுப்பதை தடுக்கிறார்கள் எனப் பல கதைகள் இருக்கின்றன. ஆனால் இவற்றின் உண்மைத் தன்மை, பின்னணி தொடர்பில் நாம் சிந்திக்க வேண்டியது காலத்தின் அவசியமாக உள்ளது.

சாய்ந்தமருது சபை கொடுப்பதை ஏன் ஹரீஸ் தடுக்கவேண்டும்? இதனால் ஹரீஸுக்கு இருக்கும் நன்மை என்ன? ஹரீஸ் இப்போது வாழும் ஊர் சாய்ந்தமருது தானே? ஹரீஸுக்கு எதிராக பல ஒலி பெருக்கிகளை கட்டி கோஷமிட்டும் 4 ஆயிரம் அளவிலான சாய்ந்தமருது மக்கள் மு.காவுக்கு அதிலும் குறிப்பாக ஹரீஸுக்கு வாக்களிக்கக் காரணம் என்ன? ஹரீஸ் தடுக்கிறார் என்றால் அவரை விட பலம் பொருந்திய ஹக்கீம், ரிஷாத் பெற்றுக் கொடுக்காமல் விட்டமை ஏன்? எனும் பல கேள்விகளுக்கு ஒழுங்கான விடை தெரியாது பலரும் தமது அரசியல் வளர்ச்சிக்கான கதைகளை பரப்பிக்கொண்டிருந்த சூழ்நிலையில் சாய்ந்தமருது மக்கள் பணிமனை கடந்த ஜனாதிபதித் தேர்தலில் பஸிலுடன் ஒப்பந்தமொன்றை செய்து மொட்டுக்கு முட்டுக் கொடுத்தது.

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

# சொந்த நலனை விட்டு பொதுமக்கள் விருப்பத்துக்குத் தலைவணங்குங்கள்!

## ஜனாதிபதியிடம் கோரும் ட்ரான்ஸ்பேரன்சி இன்டர்நஷனல்

இலங்கையின் ஜனாதிபதியும் தற்போதைய நிர்வாகமும் மக்களின் விருப்பத்துக்குத் தலைவணங்கவேண்டும் என்று இலங்கை ட்ரான்ஸ்பேரன்சி இன்டர்நஷனல் அழைப்பு விடுத்துள்ளது.

அவசரகாலச் சட்டங்கள், ஊரடங்குச் சட்டம் மற்றும் சமூக ஊடகத்தடைகள் ஆகியவற்றின் மூலம் குடிமக்களின் கருத்துச் சுதந்திரம் மற்றும் சட்டபூர்வமான ஒன்றுகூடல் ஆகியவற்றை முடக்குவதற்கு ஜனாதிபதி மற்றும் நிர்வாகத்தின் முயற்சிகளைக் கண்டித்து வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இந்த வலியுறுத்தல் விடுக்கப் பட்டுள்ளது.

மக்களின் அடிப்படை உரிமைகளைப் பாதுகாக்கும் அதே வேளையில், அதிகாரத்தில் இருப்பவர்கள் அவர்களின் செயல்களுக்குப் பொறுப்புக் கூறலையும் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

கருத்துச் சுதந்திரத்துக்கான உரிமை நாட்டில் ஊழலுக்கு எதிரான ஒரு முக்கியமான எதிரொலியாகும். மக்கள் இப்போது சத்தமாகவும் தெளிவாகவும் தங்கள் செய்தியை வழங்கியுள்ளனர்.

இந்த நாட்டு மக்களின் செயலற்ற குரல்கள் ஒன்றிணைந்து ஒரு சக்திவாய்ந்த அதிர்ச்சி அலையை உருவாக்கியுள்ளன.

இது அதிகாரத்தில் உள்ளவர்களை ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளது. நாட்டின் தற்போதைய நிலைமை பல தசாப்தங்களாகப் பொது வளங்களை பாரிய அளவில் தவறாகப் பயன்படுத்துதல் மற்றும் தவறாக நிர்வகித்தல், முறையான ஊழல், வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறல் இல்லாமை ஆகியவற்றின் வெளிப்பாடாகும்.

இந்த நிலையில் உயர் மட்டங்களில் அரசியல் சூழ்ச்சிக்கான வாய்ப்பையும், மறைமுக நோக்கங்களைக் கொண்டவர்கள் அதிகாரத்துக்கு வருவதற்கான வாய்ப்பையும் இந்தச் சந்தர்ப்பம் வழங்கி விடும்.

எனவே, இலங்கையர்கள் விழிப்புடன் இருக்க வேண்டும் என்று இலங்கை ட்ரான்ஸ்பேரன்சி இன்டர்நஷனல் சுட்டிக்காட்டியுள்ளது.

கலவர காலங்களில், அதிகாரத்துக்கு வருபவர்கள் மேலும் ஊழல் செல்வாக்கு செலுத்தி, அன்புக்குரிய தாய் நாட்டை நாசமாக்க முடியும்.

1948 இல் சுதந்திரம் பெற்றதில் இருந்து, ஊழல் காரணமாக இலங்கை பொருளாதாரச் சீர்குலைவுக்கு உள்ளாகியுள்ளது என்ற உண்மையை அங்கீகரிப்பது அவசியம்.

ஒரு நாட்டின் கொள்கைகள், சட்டங்கள் மற்றும் அமைப்புகள் ஆட்சியில் இருப்பவர்களின் நலனுக்காக மாற்றப்பட்டால், அது நாட்டுக்காக அல்ல. அது கைப்பற்றப்பட்ட நாடாகவே அடையாளப்படுத்தப்படுகிறது.

எனவே ஜனாதிபதியும் தற்போதைய நிர்வாகமும் மக்களின் விருப்பத்துக்கு தலைவணங்குமாறு அழைப்பு விடுக்கிறோம் என இலங்கை ட்ரான்ஸ்பேரன்சி இன்டர்நேஷனல் கோரியுள்ளது.



## கிரிகெட் அணியின் தலைவரும் அரசுக்கெதிரான போராட்டத்தில்!

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியை தொடர்ந்து அரசாங்கத்திற்கு எதிராக மக்கள் போராட்டம் வெடித்துள்ளது.

நாடு முழுவதும் போராட்டங்கள் வெடித்துள்ள நிலையில், ஜனாதிபதி, பிரதமர் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் வீடுகள் பொது மக்களால் முற்றுகையிடப்பட்டுள்ளன. அரசாங்கத்துக்கு எதிரான இந்தப் போராட்டத்தில் அரசியல் கட்சிகளுக்கு அப்பால் பலரும் கலந்துகொண்டுள்ளனர்.

இந்நிலையில், இலங்கை டெஸ்ட் கிரிக்கெட் அணியின் தலைவர் திமுத் கருணாரத்னவும் அரசாங்கத்துக்கு எதிரான கொழும்பில் இடம்பெற்ற போராட்டத்தில் கலந்துகொண்டுள்ளார்.

# முல்லை ஊடகவியலாளர் கவனவீர்ப்புப் போராட்டம்!




தென்பகுதியில் ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதலை கண்டித்து முல்லைத்தீவு ஊடகவியலாளர்களால் திங்கட்கிழமை கவனவீர்ப்பு போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

தென்பகுதியைச் சேர்ந்த சிங்கள ஊடக வியலாளர் பலர் கடந்த 31 ஆம் திகதி கொழும்பு மீரிஹான பகுதியில் உள்ள ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் வீட்டின் முன் நடத்திய போராட்டம் தொடர்பில் அறிக்கையிடலுக்காகச் சென்ற வேளை பொலிஸார், விசேட அதிரடிப் படையினர் மற்றும் இராணுவத்தினரின் தாக்குதலில் காயமடைந்துள்ளனர்.

இதனைத் தொடர்ந்து நான்கு ஊடகவியலாளர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

எனவே இந்தச் செயற்பாட்டுக்கு எதிர்ப்பு தெரிவித்தே இந்தக் கவனவீர்ப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது என ஊடகவியலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்தத் தாக்குதல் நடவடிக்கையை கண்டித்து முல்லைத்தீவு ஊடக அமையத்தினரால் கண்டன அறிக்கை ஒன்றும் வெளியிடப்பட்டுள்ளது அந்த அறிக்கை வருமாறு –

எமது சகோதர சிங்கள ஊடகவியலாளர்கள் மீதான மிலேச்சதனமானத் தாக்குதலை வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

தென்பகுதியைச் சேர்ந்த எமது சகோதர சிங்கள ஊடகவியலாளர் பலர் கடந்த 31 ஆம் திகதி அன்று கொழும்பு மீரிஹான பகுதியில் உள்ள ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் வீட்டின் முன் நடத்திய போராட்டம் தொடர்பில் அறிக்கையிடலுக்காகச் சென்ற வேளை பொலிஸார், விசேட அதிரடிப்படையினர் மற்றும் இராணுவத்தினரின் தாக்குதலில் காயமடைந்துள்ளதோடு நான்கு ஊடகவியலாளர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டும் உள்ளனர்.

இலங்கை பாதுகாப்பு தரப்பினரின் இந்த மிலேச்சத்தனமான தாக்குதலை முல்லைத்தீவு ஊடக அமையத்தினராகிய நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

அத்தோடு மக்களின் ஜனநாயகப் போராட்டம் தொடர்பில் அறிக்கையிடச் சென்ற வேளை தாக்குதலுக்குள்ளாகி பாதிக்கப்பட்டுள்ள சகோதர ஊடகவியலாளர்களுக்கு இந்த நேரத்தில் வடக்கிலிருந்து நாம் எமது ஒற்றுமையையும் ஆதரவையும் வெளிப்படுத்தி நிற்கின்றோம். கடந்த காலங்களில் குறிப்பாக வடக்கு கிழக்குப் பகுதியில் தமிழ் மக்களின் உரிமை சார்ந்த விடயங்கள், அரசுக்கு எதிரான போராட்டங்கள், அரச தரப்பினராலும் அரச ஆதரவு தரப்பினராலும் மேற்கொள்ளப்பட்ட மனித உரிமை மீறல்கள் தொடர்பான செய்திகளை துணிச்சலோடு வெளிப்படுத்தி வந்த தமிழ் பேசும் ஊடக வியலாளர்கள் மீதான தாக்குதல்கள் தொடர்ந்து வந்த நிலையில் அது இன்று எமது சகோதர சிங்கள ஊடக வியலாளர்கள் மீதும் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது மன வேதனையளிக்கிறது.

கடந்த காலத்தில் பல தமிழ் ஊடகவியலாளர் கொலை செய்யப்பட்டும் வலுக்கட்டாயமாகக் கடத்தி காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு தமிழ் மக்களின் உரிமை சார் விடயங்களை வெளிக்கொண்டு வரும் தமிழ் ஊடகவியலாளர்களை பயங்கரவாதிகளாகச் சித்திரிப்பதும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் மூலம் கைது செய்வதும் விசாரணைகளுக்கு அழைத்து ஊடக வியலாளர்களுக்கு அச்சுறுத்தல் விடுப்பதும் இந்த ஆட்சியிலும் தொடர்ந்துவரும் நிலையில் தற்போது இந்த ஊடக அடக்குமுறை எமது சகோதர சிங்கள ஊடகவியலாளர்கள் மீதும் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் பல்வேறு ஊடகவியலாளர்கள் மீது இராணுவம் உள்ளிட்ட பாதுகாப்புத் தரப்பினரால் கொலை, கடத்தல், காணாமல் ஆக்கப்படுத்தல், தாக்குதல் அச்சுறுத்தல் போன்ற சம்பவங்கள் இடம்பெற்றபோதிலும் அதற்கான சரியான நீதி விசாரணைகள் உரிய தரப்பினால் முன்னெடுக்கப்படாமையே இலங்கையில் தொடர்ந்தும் ஊடகவியலாளர்கள் தாக்கப்படும் நிலைக்கு காரணமாக இருந்து வருகிறது.

ஜனநாயகத்தின் நான்காவது தூணாக விளங்கும் ஊடகத்துறை மீது அரச பாதுகாப்புத் தரப்பினரால் மேற்கொள்ளப்படும் இவ்வாறான மிலேச்சத்தனமான நடவடிக்கைகள் சுயாதீனமானதும் வினைத்திறனானதுமான ஊடக செயற்பாட்டுக்கு அடிக்கப்பட்டுவரும் சாவு மணியாகும்.

இவ்வாறான பின்னணியில் தற்போது தென்பகுதியில் அதிகரிக்கும் அரசுக்கு எதிரானப் போராட்டங்களை அடக்கும் முகமாக ஊடகவியலாளர்கள் மீது தாக்குதலை மேற்கொண்டதன் மூலம் அரசுக்கு எதிரான போராட்டங்கள், மனித உரிமைகள் சார்ந்த விடயங்களை வெளிக்கொணர்ந்தால் ஊடகவியலாளர்கள் நசுக்கப்படுவர் என்ற செய்தியை அரசு வெளிப்படுத்தியுள்ளது.

குறிப்பாக அரசின் ஊதுகுழலாக செயற்படாது அரசுக்கு எதிரானப் போராட்டங்கள் மனித உரிமைகள் மீறப்படும் சந்தர்ப்பங்களில் தலையீடு செய்யும் ஊடகவியலாளர்கள் வடக்கு கிழக்கு அன்றி நாடு முழுவதும் தாக்கப்படுவர் என்பதை உணர்த்தும் நடவடிக்கையாகவே இந்தத் தாக்குதல் சம்பவத்தை நாங்கள் பார்க்கிறோம்.

இந்நிலையில் ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதல்களுக்கு அனைவரும் ஒன்றுபட்டு குரல்கொடுக்க வேண்டிய தேவையை இந்தச் சம்பவம் உணர்த்தியுள்ளது.

ஊடகவியலாளர்களின் ஊடகப் பணிக்கு இடையூறு விளைவிக்கும், அச்சுறுத்தல் மேற்கொள்ளும் சித்திரவதைக்கு உட்படுத்தும் அரச பாதுகாப்புத் தரப்பினரின் இவ்வாறான தொடர் செயற்பாடுகளை முல்லைத்தீவு ஊடக அமையம் வன்மையாகக் கண்டிப்பதுடன், ஊடகவியலாளர்களின் செயற்பாடுகளில் அக்கறையுள்ள உரிய தரப்புக்களும், சர்வதேச அமைப்புக்களும், சரியான நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் இலங்கையில் எதிர்வரும் நாள்களில் ஊடகவியலாளர்களின் பாதுகாப்பு தொடர்பில் தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும் எனவும் வலியுறுத்தி நிற்கின்றோம். – என அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

# நாடாளுமன்றத்துக்கு வெளியே மக்கள் அரசு உருவாகவேண்டும்

## முன்னிலை சோசலிச கட்சி யோசனை

நாடாளுமன்றிற்கு வெளியே மக்கள் அரசாங்கமொன்றை உருவாக்க வேண்டுமென முன்னிலை சோசலிச கட்சியின் செயலாளர் குமார் குணரட்னம் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்துக்கு எதிராகக் கிளர்ந்து எழுந்துள்ள மக்களின் சக்தியை கட்சியொன்றோ அல்லது குழுவொன்றோ அபகரித்துக் கொள்ள இடமளிக்கப்படக்கூடாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் வைத்து அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதன்போது மேலும் தெரிவிக்கையில் –

நாடாளுமன்றுக்கு வெளியே மக்கள் அரசாங்கமொன்றை உருவாக்க மக்கள் அணி திரள வேண்டும்.

மக்களுக்கு தங்களது பிரச்சினைகளை முன்வைக்கக்கூடிய மக்கள் சபைகள் உருவாக்கப்பட வேண்டும்.

இந்த மக்களின் பிரச்சினைகள் தேசிய பேரவையின்



ஊடாகத் தீர்க்கப்பட வேண்டும்.

ஆட்சியில் இருக்கும் எந்தவோர் அரசாங்கத்தின் ஊடாகவும் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணக்கூடிய பொறிமுறையை உருவாக்கப்பட வேண்டும் எனச் சுட்டிக்காட்டியுள்ளார்.

# இலங்கைக்கு கடத்தப்படவிருந்த பாம்பு, கிளிகள்



தமிழகம் ராமநாதபுரம் ரயில் நிலையப் பகுதியில் இருந்து இலங்கைக்குக் கடத்தப்படவிருந்த அரிய வகை இருதலை மணியன் பாம்பு மற்றும் 6 பச்சைக் கிளிகளை வனத்துறையின் நேற்றுக் காலை மீட்டுள்ளமையோடு, சந்தேக நபர்கள் இருவரைக் கைது செய்துமுள்ளனர்.

ராமநாதபுரம் ரயில் நிலையத்தில் சந்தேகத்திற்கு இடமான முறையில் காணப்பட்ட இருவரை வனத் துறையினர் பிடித்துச் சோதனையிட்டனர்.

அப்போது அவர்கள் ஒரு வாளியில் இருதலை மணியன் பாம்பு மற்றும் 6 பச்சைக் கிளிகளை வைத்திருந்தமை தெரியவந்தது.

இதையடுத்து அவற்றை உயிருடன் மீட்ட வனத்துறையினர் அவர்கள் வைத்திருந்த இருசக்கர வாகனத்தை பறிமுதல் செய்தனர். மேலும் அவர்களிடம் மேற்கொண்ட விசாரணையில் இந்த இருவரும் தூத்துக்குடி மாவட்டம் ஏரல் பகுதியைச் சேர்ந்தவர்கள் என்பது தெரிய வந்தது.

இருவரும் தூத்துக்குடி பகுதியிலிருந்து இருதலை மணியன் வகை மண்ணுளி பாம்பையும், கிளியையும் ரயில் மூலம் ராமேஸ்வரத்திற்கு கொண்டு செல்லத் திட்டமிட்டிருந்தமையும், அங்கிருந்து இலங்கை வழியாக சீனாவுக்கு அவை கொண்டு செல்லப்பட இருந்தமையும் தெரிய வந்தது.

இதையடுத்து அவர்கள் இருவரும் வனப் பாதுகாப்பு சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டனர்..

# ஒரு கிலோ கேக் ஆயிரம் ரூபாவாம்!

நாட்டில் ஒரு கிலோ கிராம் கேக்கின் விலை 1, 000 ரூபாவைத் தாண்டியுள்ளது.

மூலப்பொருள்கள் மற்றும் ஏனைய இதர காரணங்களால் இவ்வாறு கேக்கின் விலை அதிகரித்துள்ளது.

எரிபொருள், எரிவாயு மற்றும் மின்சார நெருக்கடிகள் பேக்கரி தொழில் உட்பட பிற துறைகளை பாதித்துள்ளன.

பேக்கரி உரிமையாளர்கள் சங்கத் தலைவர் என்.கே. ஜயவர்தன இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

# அரசை உடன் கலைத்துவிட்டு இடைக்கால அரசை உருவாக்குக!



### மகாநாயக்க தேரர்கள் அறிவிப்பு

அமைச்சரவையை முழுமையாக கலைத்து இடைக்கால அரசாங்கத்தை உருவாக்குமாறு மகாநாயக்க தேரர்கள் கூட்டாக ஒன்றிணைந்து ஜனாதிபதிக்குக் கடிதம் ஒன்றின் ஊடாக இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

நாட்டின் பிரதான பௌத்த பீடங்களான மல்வத்த, அஸ்கிரிய, ராமாஞ்ய, அமரபுர மஹா நிக்காயவின் சங்கைக்குரிய மஹா நாயக்க தேரர்கள் கூட்டாக ஒன்றிணைந்து அந்தக் கோரிக்கையை விடுத்துள்ளனர்.

# மீண்டும் ஆரம்பிக்கப்போகும் ..........................

(05ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால் சாய்ந்தமருது மக்களில் கணிசமானவர்கள் சஜித்துக்கு ஆதரவை தெரிவித்தமையை தேர்தல் பெறுபேறுகள் தெளிவாக முன்வைத்தன. இதனால் தேர்தல் முடிந்த கையோடு ஆசியாவின் சிறந்த ராஜதந்திரிகளில் ஒருவராக நோக்கப்படும் பஸில் சாய்ந்தமருது ஒப்பந்தம் தொடர்பில் வானத்துக்கும் பூமிக்கும் குதித்ததை யாரும் மறந்திருக்க மாட்டார்கள்.

இவைகளெல்லாம் இப்படியிருக்க தேசிய காங்கிரஸின் பிரதேச முக்கியஸ்தர்கள் ஊடாக மறைமுக உறவைக் கொண்டிருந்த சாய்ந்தமருது பிரமுகர்கள் பலரின் முயற்சியால் அந்த உறவு வெளிப்படையாக காட்டப்பட்டு கடந்த பொதுத்தேர்தலில் சாய்ந்தமருது மண், நகர சபையை முன்வைத்து தேசிய காங்கிரஸுக்கு அடைமானம் வைக்கப்பட்டது. இதில் சாய்ந்தமருதைச் சேர்ந்த முக்கிய வர்த்தகபிரமுகர் ஒருவரை வேட்பாளராகக் களமிறக்க சாய்ந்தமருது முக்கியஸ்தர் ஒருவரின் பரிந்துரையுடன் தயாராக இருந்த தேசிய காங்கிரஸ் தலைவரை மாளிகைக்காடு - சாய்ந்தமருதை சேர்ந்த பிரமுகர்களின் ஆலோசனைப்படி, சாய்ந்தமருது பள்ளிவாசலின் தீர்மானத்தை முன்வைத்து சிரேஷ்ட நிர்வாக சேவை அதிகாரியான ஏ.எல்.எம். சலீம் வேட்பாளராகக் குதிரை சின்னம் இலக்கம் மூன்றில் நிறுத்தப்பட்டார். வென்றால் சாய்ந்தமருது நகரசபையும், போனஸாக சலீமுக்கு பிரதியமைச்ஸும் எனப் பிரசாரங்கள் முடுக்கிவிடப்பட்டு தேர்தல் நடந்து முடிந்தது. கருணா அம்மானின் வருகை, ஏமாந்த சாய்ந்தமருது மக்களின் வாக்குகள் ஊடாக தேசிய காங்கிரஸ் தலைவர் அதாவுல்லா எம்.பியானார்.

10 ஆயிரத்து 401 வாக்குகள் தேசிய காங்கிரஸுக்காக கல்முனை தொகுதியில் அளிக்கப்பட்டன. இதில் மென்மையான போக்குக்கொண்ட சட்டத்தரணி ஏ.எல்.எம். றிபாஸ், கல்முனை மண்ணுக்கான போராளிகளில் ஒருவராக பிரபலமான பிரபல ஆசிரியர் ரிஷாத் செரீப், மக்களின் நன்மதிப்பைப் பெற்ற சலீம் டீ.எஸ். என மக்களால் அறியப்படும் சிரேஷ்ட நிர்வாக சேவை அதிகாரி ஏ.எல்.எம். சலீம் என மூவர் களமிறங்கினர். இதில் ரிாத் செரீப், சட்டத்தரணி றிபாஸ் ஆகியோரின் வாக்குகளை கழித்தால் சாய்ந்தமருது தேசிய காங்கிரஸுக்கு அளித்த வாக்குகள் எத்தனை என்பதை வாக்கெண்ணும் நிலையத்தில் இறுதி முடிவறிவிக்கும்வரை இருந்த கட்டுரையாளாரான என்னால் கூற முடியும். இப்படி கல்முனை தொகுதியில் அதிகமான வாக்குகளை வழங்கிய சாய்ந்தமருது மண்ணுக்கு அதாவுல்லா எம்.பி. கொடுத்த வஹ்தாவை (வாக்குறுதியை) நிறைவேற்றுவாரா என்பதே இன்றைய கோடி டொலர் கேள்வி ?

கல்முனை மாநகர சபை ஆட்சியாளர்களின் ஓரக்கண் பார்வை அரசியலில் உருவெடுத்த இந்தப் போராட்டம் இன்று அதாவுல்லா எம்.பியின் தலையின் மீது திணிக்கப்பட்டுள்ளது. பஸில், கோட்டா, மஹிந்த என மொட்டின் சகலரினதும் எதிர்ப்பை சம்பாதித்த ஆளும் தரப்பிலுள்ள எதிர்தரப்பாக இருக்கும் 11 கட்சிகளின் கூட்டின் முக்கியஸ்தராக, முன்னிலை செயற்பாட்டாளராக இருக்கும் அதாவுல்லா இந்த அரசில் எதையும் சாதிக்க முடியாது என்பது வெளிப்படை உண்மை. வேட்பாளர் நியமனம், அமைச்சரவை பதவி ஏமாற்றம், அரசுக்கு எதிரான போக்குகள் என செல்லாக்காசாக மாறியிருக்கும் அதாவுல்லாவை நம்பி பிரயோசனம் இல்லை என்பதை சாய்ந்தமருது நன்றாக கணித்து விட்டது. நகர சபை போராட்டத்தின் முன்னிலை போராளியாக இருந்த பள்ளித்தலைவர் ‘உமர்முக்தர்’ வை.எம். ஹனிபாவின் இறுதி சடங்கில் (ஜனாஸாவில்) கூட அதாவுல்லா கலந்துகொள்ளவில்லை. அவர் கூறிய காரணங்கள் உப்புசப்பு இல்லாதவை. அவரின் கூடப்பிறந்த யாராவது மரணித்திருந்தால் வந்திருக்க மாட்டாரா? பழையதை மறந்து செயற்படுகிறார். அவர் இன்று எம்.பி. கதிரையில் இருக்க காரணமானவரின் ஜனாஸாவில் கலந்துகொள்ள கூட மனமில்லாத அதாவுல்லா எப்படி செய்ந்நன்றி செய்வார் எனும் வாதம் பரவலாக சாய்ந்தமருதில் இப்போது பேசப்பட்டு வருகிறது.

அதாவுல்லாவை நம்பி, மொட்டில் நேரடியாக களமிறங்கிய ரிஸ்லியை நிராகரித்த சாய்ந்தமருது மண் ரிஸ்லி செய்த அபிவிருத்தியின், சேவைகளின் ஒரு பகுதியைக் கூட அதாவுல்லாவால் பெறவில்லை என்பதே உண்மை. சாய்ந்தமருது மக்கள் பாரியளவில் வாக்களிக்கத் தவறிய ஹரீஸ், முஷாரப், பைசால், வீரசிங்க, திலக், விமலவீர என்று எல்லோரும் மருதூருக்கு சேவை செய்துள்ளனர். அவர்கள் செய்த சேவையில் 5/6 மடங்கு சேவையை அதாவுல்லா சாய்ந்தமருதுக்கு செய்திருக்க வேண்டும். அதுவும் செய்யப்படவில்லை. வண்ட் வீதியும் நிறுத்தப்பட்டுள்ளது. அதாவுல்லா ஆரம்பித்த உள்ளக வீதிகளும் இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை. நாங்கள் நம்பி ஏமாந்துவிட்டோம் என கடந்த பொதுத்தேர்தல் மேடைகள் சகலதிலும் தேசிய காங்கிரஸுக்காக பிரசாரம் செய்த சாய்ந்தமருது முக்கியஸ்தர்கள் புலம்ப ஆரம்பித்துவிட்டனர்.

மறுபுறத்தில் சிரேஷ்ட மற்றும் விசேட தரத்தில் உள்ள இலங்கை நிர்வாக சேவை அதிகாரியான ஏ.எல்.எம். சலீம் இப்போது சேவையில் இருந்திருந்தால் மாகாண பிரதம செயலாளராக, அரச அதிபராக, அமைச்சின் செயலாளராக வந்திருக்க வாய்ப்பிருக்கிறது. அவற்றையெல்லாம் உதறிவிட்டு பலரும் அதாவுல்லாவை நம்ப வேண்டாம் அவர் ஏமாற்றுக்காரன் என்பதையெல்லாம் கவனத்தில் கொள்ளாது ஊரின் நலனுக்காக அதாவுல்லாவுடன் சென்றார். ஆனால் இன்று அரசனுமில்லை, புருஷனுமில்லை எனும் நிலைக்கு மக்கள் அபிமானம் பெற்ற சலீம் டீ.எஸ். மாறியிருப்பது கவலையான விடயம். இப்படி நகர சபை ஏமாற்றம் மட்டுமல்ல, அதிகார ஏமாற்றங்களையும் சாய்ந்தமருது சந்தித்துள்ளது என்பது வெளிப்படையான உண்மை. இருந்தாலும் உயர் மட்ட அதிகாரி ஒருவரின் பரிந்துரையுடன் ஆறுதல் பரிசாக பொதுச்சேவை ஆணைக்குழு உறுப்பினர் பதவி அவருக்கு கிட்டியது. அது வயிறூதியவனுக்கு காற்று போனது போன்றே அமைந்துள்ளதை நாம் காணலாம். எல்லாவற்றையும் அவதானித்த அவரும், அவர் சார்ந்த நகர சபை போராட்ட ஊர் போராளிகளும் இப்போது மாற்று முடிவுக்குத் தயாராகின்றனர். சாய்ந்தமருதில் 100 வாக்குகள் கூட இல்லாத பலரும் பிரமுகர் அந்தஸ்தை பெற முக்கியஸ்தர்கள் பலரும் தே.கா விலிருந்து கழண்டு கொண்டு இருக்கிறார்கள். மருதூரில் பலத்த சரிவை தே.கா. சந்தித்துள்ளது. இதனால் மாவட்டத்திலும் பலத்த சரிவை அவர்கள் கண்டுவருகிறார்கள்.

இந்த ஆட்சியில் சாய்ந்தமருதுக்கான நகரசபை மலர வேண்டுமாக இருந்தால் ஆட்சியாளர்களின் செல்லப் பிள்ளைகளின் ஆசிர்வாதமும், தலையசைத்தலும் தேவையாக உள்ளது. சாய்ந்தமருது மண்ணின் தாகத்தை தணிக்க பஸில், மஹிந்த, கோட்டா என பலரும் அறிந்த இந்தப் பிரச்சினைக்கு தீர்வை வழங்க யாரால் முடியும் என்பதே இன்று சாய்ந்தமருது தேட வேண்டிய விடயமாக அமைந்துள்ளது. யார் அந்த செல்லப்பிள்ளை ? மக்களுக்கு தெரியும். காலம் கனிந்தால் பல உண்மை செய்திகள் வெளிவரும். இப்போது தேர்தல் நெருங்குகிறது. மீண்டும் வேதாளம் ஏறத் தயாராகிறது சாய்ந்தமருது போராட்டம். முற்றுப்புள்ளியில்லா பிரச்சினையாக இருக்கும் இந்தப் பிரச்சினைக்கு தீர்வை வழங்க முன்வரப்போவது யார்?

# மலையகத் தமிழ் மாணவர்களின் குரலாக திகழ்ந்தவர் பேராசிரியர் சந்திரசேகரம்



"இலங்கையில் வாழும் நான்கு இனக்குழுக்களுள் மலையகச் சமூகமும் ஒன்று. மலையகத்தில் மூன்று பல்கலைக்கழகங்கள் (பேராதனை, ஊவா வெல்லச, சப்பிரகமுவ) உண்டு. ஆனால், இங்கு மலையக மக்கள் சமூகம், வாழ்வியல், கலை, கலாசாரம் தொடர்பான கற்கை நெறிகளோ, அடையாளமோ எதுவுமில்லை. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், கிழக்கிலங்கைப் பல்கலைக்கழகம் என்பன இலங்கைத் தமிழரின் அடையாளம் கொண்டவை. இராமநாதன் கலை அக்கடமி, விபுலாநந்தர் இசைக் கல்லூரி என்பன அத்தகையவை. அவ்வாறே தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் முஸ்லிம்களின் அடையாளம் உண்டு. சுருங்கக் கூறின், மலையக மக்களின் தனித்துவ அடையாளத்தைப் பிரதிபலிக்கும் வகையில் (சகல இன மாணவர்களும் பயிலும்) தேசியப் பாங்கான மலையகப் பல்கலைக்கழகத்தால் கோரிக்கை முன்வைக்கப்படுகின்றது.

இன்று இயங்கிவரும் 16 தேசியப் பல்கலைக்கழகங்களுக்கு அப்பால் காலப்போக்கில் நிச்சயமாக புதிய பல்கலைக்கழகங்கள் உருவாக்கப்படப் போகின்றன. அவற்றின் வளர்ச்சி நின்று விட முடியாது. புதிதாக உருவாக்கப்படும் தேசிய பல்கலைக்கழகங்களில் ஒன்றை நுவரெலியாவில் நிறுவுமாறு கோரிக்கை விடுக்கப்படுகின்றது. இவ்வாறு தொடர்ந்து குரல் எழுப்பிவந்த பேராசிரியர் சோ. சந்திரசேகரம் அவர்கள், கடந்த திங்கட்கிழமை மாரடைப்பால் மறைந்தார்.

ஓய்வுபெற்ற தகைமைசார் பேராசிரியராகத் தொடர்ந்தும் கலை, இலக்கிய, கல்வி சார்ந்த நிகழ்வுகளிலும் சமகால மெய்நிகர் அரங்குகளிலும் இணைந்திருந்தவர், தமது 78 வயதில் மறைந்திருக்கிறார்.

பதுளையில் 1944 ஆம் ஆண்டு பிறந்திருக்கும் சந்திரசேகரம், பதுளை ஊவா கல்லூரியில் தனது ஆரம்பக்கல்வியையும், அதனையடுத்து யாழ். தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியில் உயர் கல்வியையும் தொடர்ந்தார்.

பேராதனை பல்கலைக்கழகத்தில் தமது பட்டப்படிப்பைப் பூர்த்திசெய்திருக்கும் அவர், ஜப்பானிலும் பட்டம் பெற்றவர். கொழும்பு, பேராதனை பல்கலைக்கழகங்களில் விரிவுரையாளராகக் கடமையாற்றியிருக்கும் அவர், இலக்கிய நிகழ்வுகள் பலவற்றுக்கும் தலைமை ஏற்று சிறப்பித்தவர்.

பத்திரிகைகள், இதழ்களில் அடிக்கடி ஆக்கங்கள் எழுதிவந்திருக்கும் பேராசிரியர் சந்திரசேகரம், மலையகத்தில், மலையக மக்களின் கலாசாரத்தையும் பண்பாட்டுக் கோலங்களையும் பயிற்றுவிக்கும் தனியான பல்கலைக்கழகம் அமையவேண்டும் என்று தொடர்ந்தும் குரல் எழுப்பிவந்தவர்.

பன்முக ஆளுமையும் பல்துறை ஆற்றலும் நிரம்பப்பெற்ற பேராசிரியர் சந்திரசேகரம் அவர்களுக்கு 2004 ஆம் ஆண்டு மணி விழா நடந்தபோது வெளியான சிறப்புமலரின் உள்ளடக்கம், அவரது சிறப்பியல்புகளையும் பேசுகிறது.

இலங்கை – இந்தியர் வரலாறு, கல்வி இயல் கட்டுரைகள், புதிய நூற்றாண்டுக்கான கல்வி, கல்விச் செயற்பாட்டில் புதிய செல்நெறிகள், மலையக கல்வி சில சிந்தனைகள் உட்பட பல நூல்களை தமிழிலும் ஆங்கிலத்திலும் வரவாக்கியிருப்பவர்.


முன்னைய நல்லிணக்க அரசின் பதவிக்காலத்தில், அரசகரும மொழிகள் ஆணைக்குழுவின் தலைவராகவும் அவர் நியமிக்கப்பட்டிருந்தார்.

இலங்கை கல்வியியல் சார்ந்த பல கட்டுரைகளை ஊடகங்களில் தொடர்ந்து எழுதிவந்த அவரது கரம் ஓய்ந்துவிட்டது.

- (முருகபூபதி) -

## பேராசிரியர் சந்திரசேகரத்தின் மறைவு கல்வித்துறைக்கும், நாட்டுக்கும் பேரிழப்பு

### முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் அனுதாபம்



இலங்கையிலும் தமிழ் பேசும் மக்கள் வசிக்கின்ற நாடுகளிலும் நன்கு அறியப்பட்ட பேராசிரியர் சோ. சந்திரசேகரத்தின் மறைவு பொதுவாக கல்வித் துறைக்கும், நாட்டுக்கும் பாரிய இழப்பாகும் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் விடுத்துள்ள அனுதாபச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

அதில், முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீம் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு –

பேராசிரியர் சோ. சந்திரசேகரன் முன்னர் கொழும்பு பல்கலைக் கழகக் கல்விப் பீடத்தின் பீடாதிபதியாக இருந்தது மட்டுமல்லாமல், நாடளாவிய ரீதியில் தமிழ் பேசும் மக்கள் மத்தியில் கல்வி விழிப்புணர்ச்சியையூட்டுவதற்கு அயராது பாடுபட்ட ஒருவராக இருந்திருக்கிறார்.

தமிழ் மக்களின் கல்வியில் மட்டுமல்ல, பொதுவாக சிறுபான்மை மக்களின் கல்வி வளர்ச்சியில் அவர் காட்டிய ஆர்வம் குறிப்பிடத்தக்கது. கல்வித்துறையில் முஸ்லிம்களும் சிறந்து விளங்க வேண்டும் என அவர் மனதார விரும்பினார். இலங்கையில் பல்கலைக்கழக மட்டத்திலும், சமூகம் சார்ந்த நடவடிக்கைகளிலும் அவரது பங்களிப்பு மகத்தானது.

குறிப்பாக, மலையகத்தில் பிறந்தவர் என்ற வகையில் மலையக மக்களைப் பெரிதும் மையப்படுத்தியதாக அவரது எழுத்துக்கள் இருந்தன. அவர் சிறந்த எழுத்தாளராகவும், பேச்சாளராகவும் வானொலியிலும், தொலைக்காட்சியிலும் அடிக்கடி நேர்காணல் செய்யப்படுபவராகவும் இருந்திருக்கிறார்.

அத்துடன், தனிப்பட்ட முறையில் நான் அவருடன் நெருங்கிப் பழகியிருக்கிறேன். நான் எழுதிய தந்தை செல்வநாயகம் பற்றிய ஒரு நூலைப் பாராட்டி அவர் எழுதிய கருத்துக்களை இன்றும் நான் பெரிதாக மதிக்கின்றேன்.

எந்த விதமான வித்தியாசமும் இன்றி, கல்விச் சமூகத்தினருடன் மட்டுமல்லாது, சாதாரண பொது மக்களுடனும் கூட மனம் விட்டு பழக கூடிய தன்மையை இயல்பாகவே அவர் கொண்டிருந்தார். எந்தவிதமான ஆரவாரமும் இன்றி கல்விப் பணியில் தனது காலத்தை அவர் முழுமையாக அர்ப்பணித்திருந்தார்.

அன்னாரது இழப்பினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எங்களது ஆழ்ந்த அனுதாபத்தை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் பதிவு செய்கின்றேன்.
– என்றுள்ளது.

## கல்வியியல் துறையில் கனதியான இடம் பிடித்தவர் பேராசிரியர் சந்திரசேகரன்

### யாழ். பல்கலைக்கழக கல்வியியல் துறையின் அஞ்சலி

இலங்கைக் கல்வி முறைமையிலும் பல்கலைக்கழகங்களின் கல்வியியல் துறை வரலாற்றிலும் கனதியான இடத்தை தனதாக்கிய மூத்த கல்வியியல் பேராசிரியர் சோ.சந்திரசேகரனின் பிரிவு இலங்கை கல்வித் துறையில் மீள் நிரப்ப முடியாத இழப்பாகும்.

– இவ்வாறு யாழ். பல்கலைக்கழக கல்வியியல் துறை தனது அஞ்சலிச் செய்தியில் தெரிவித்துள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு –

அவரது வெற்றிடம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கல்வியியல் துறைக்கும் பேரிழப்பாகும். யாழ்ப்பாணப் பல்கலைக் கழக கல்வியியல் துறையுடன் நீண்டகால தொடர்பை அறிவார்ந்த ரீதியில் கொண்டிருந்த அவர் வருகைதரு விரிவுரையாளர், இரண்டாம் பரீட்சகர், பட்டப்பின் கற்கைகளின் ஆய்வுச் செயற்பாடுகளின் மேற்பார்வையாளர், பரீட்சகர் எனப் பல வகிபாகங்களை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துடனும் குறிப்பாக உயர்பட்டப்படிப்புக்கள் பீடம் மற்றும் அதனூடாகக் கல்வியியல் துறையுடனும் கொண்டிருந்தவர்.

கல்வியியல் சார்ந்த அறிவைப் பரவலாக்குவதில் கனதியான பங்களிப்பை நல்கிய பேராசிரியர் அவர்களின் ஆக்கங்கள் இன்றும் கல்வித்துறைசார் கற்கைகளில் அதிக தாக்கத்தைச் செலுத்துவன.

மலையகப் புலத்தில் பிறந்து இலங்கையின் வடக்குப் புலத்தால் தத்தெடுக்கப்பட்டு மாண்புற்றவர்களாகத் திகழ்ந்த ஒரு தலைமுறையின் முன்னோடி உதாரண புருஷராகத் திகழ்ந்தவர். பழகுவதற்கு இனிய பண்பாளரான அவர் நேர்சிந்தனையுடன் மாணவர்களை வழிப்படுத்துவதில் தனித்தன்மை மிக்கவர்.

இலங்கை மற்றும் சர்வதேச கற்றல் அனுபவம் உள்ள அவர் இலங்கையில் கல்வித் துறைசார்ந்து பல மட்டங்களில் தனது பங்களிப்பை நல்கியுள்ளார். கல்விக் கொள்கை வகுப்பாக்கம், கலைத்திட்ட விருத்தி, பாடநூலாக்க ஆலோசனை, ஆசிரியர் கல்வியில் புதிய கற்கைகளின் அறிமுகம் என அவரது காத்திரமான பங்களிப்பால் வளம்பெற்ற துறைகள் பலவாகும்.

அமரத்துவம் அடைவதற்கு சில நாள்களுக்கு முன்பாகவும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கல்வித் துறைசார் பட்டமேற்படிப்பு மாணவர்களுக்கு இணையவழியில் தனது விரிவுரைகளை ஆற்றியவர். கற்பித்தலே தனது முதற்பணி எனக் கொண்ட அவர், அதற்கான தொடர் தேடலையும் கற்றல் அனுபவத்தையும் தனது வாழ்வின் இறுதிக் கணம் வரை கொண்டிருந்தவர். அரசாங்கம் சார்ந்த கல்விக்கான பல நியமனக் குழுக்களில் சிறுபான்மை மக்களின் பிரதிநிதியாக அவர் பல தக்க இடங்களைத் தனது அறிவு மற்றும் ஆற்றலால் அலங்கரித்தவர்.

இத்தகைய உயர் விழுமியங்களைக் கொண்ட பேராசிரியர் சந்திரசேரனின் இழப்பு இலங்கைக் கல்விச் சமூகத்துக்கு குறிப்பாகத் தமிழ் பேசும் சமூகத்துக்குப் பேரிழப்பாகும். அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதுடன் தமிழ்க் கல்விச் சமூகத்தின் சார்பில் எமது அஞ்சலிகளையும் தெரிவித்துக்கொள்கின்றோம். – என்றுள்ளது.

# தனிநபர் சுமந்திரன் ரெலோவை வெளியேறச்சொல்வது எப்படி?

## கேள்வியெழுப்புகிறார் சித்தார்த்தன்



தமிழ் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் தனிநபர் சுமந்திரன் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியான ரெலோவை எவ்வாறு வெளியேறுமாறு கூற முடியுமென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளில் ஒன்றான புளொட் அமைப்பின் தலைவரான தர்மலிங்கம் சித்தார்த்தன் கேள்வி எழுப்பியுள்ளார்.

கோப்பாய் தேசிய கல்வியியற் கல்லூரியில் இடம் பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டபோது ஊடக வியலாளர்கள் எழுப்பப்பட்ட கேள்வி ஒன்றுக்கே அவர் இவ்வாறு பதிலளித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு –

ரெலோ அமைப்பு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளில் ஒன்றாக விளங்குகின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் தனிநபராக இருக்கின்ற சுமந்திரன் ஒரு கட்சியை வெளியேறுமாறு கூறுவதற்கு அருகதை அற்றவர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை சிலர் பலவீனப் படுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புபை பல வீனப்படுத்தினால் தமிழ் மக்களை பலவீனப்படுத்துவதாக அமையும்.

சுமந்திரனின் கருத்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் உள்ள தனிநபர் ஒருவருடைய கருத்தாகவே பார்க்க முடியும்.

ஆகவே இவ்வாறான கருத்துக்களை வெளியிடுவது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனை, பங்காளி கட்சிகள் விரைவில் சந்தித்து எமது கண்டனத்தை தெரிவிப்போம். – என அவர் தெரிவித்துள்ளார்.

# சட்டவிரோத மணல் ஏற்றிவந்த டிப்பர் மோட்டார் சைக்கிளுடன் கோர விபத்து





கிளிநொச்சி, ஏப். 06

கிளிநொச்சி பரந்தன் பகுதியில் மோட்டார் சைக்கிளில் பயணித்த ஒருவரை சட்டவிரோத மணல் ஏற்றி வந்த டிப்பர் வாகனம் மோதி விபத்து ஏற்பட்டுள்ளது.

கிளிநொச்சி, பரந்தன், முல்லைத்தீவு 35 வீதியில் பரந்தன் சந்தியை அண்மித்த பகுதியில் இந்த விபத்து சம்பவம் நேற்று முன்தினம் (திங்கட்கிழமை) இடம் பெற்றுள்ளது.

இந்த விபத்தில் இளைஞரொருவர் படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப் பட்டுள்ளார்.

டிப்பர் வாகனம் கிளிநொச்சி பொலிஸாரின் உதவியுடன் தப்பிச்செல்ல இடம் அளிக்கப்பட்டுள்ளது என அங்கிருந்தவர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

சம்பவ இடத்தில் கிளிநொச்சி பொலிஸார் கடமையில் இருந்த போதும் டிப்பர் வாகனம் கொண்டு செல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# மஹிந்தவின் இல்லத்துக்கு எதிரில் கைதானவர்கள் இரவோடு இரவாக பொலிஸ் பிணையில் விடுவிப்பு

தங்காலையில் அமைந்துள்ள பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் இல்லத்துக்கு எதிரில் போராட்டம் நடத்திய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட 12 பேர் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

சட்டவிரோத ஒன்று கூடல் மற்றும் பஸ் மீது தாக்குதல் நடத்தியமை ஆகிய குற்றச்சாட்டுக்களில் இந்த நபர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர்.

திங்கட்கிழமை நள்ளிரவிலேயே மேற்படி நபர்கள் நீதிமன்றில் முன்னிலைப் படுத்தப்பட்டு, பொலிஸ் பிணையில் விடுதலை செய்யப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. கைதானவர்களுக்காக சுமார் 18 சட்டத்தரணிகள் நீதிவான் எதிரில் முன்னிலையாகியிருந்தனர்.

இதேவேளை, இந்தப் போராட்டத்தின் போது சில பொலிஸ் உத்தியோகத்தர்களும், போராட்டக்காரர்களும் காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப் பட்டுள்ளனர் எனப் பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# அநுர பிரியதர்ஷன யாப்பா மற்றும் விமல் வீரவன்ஸ ஆகியோர் நாடாளுமன்றில் சுயாதீனமாக செயற்படுவர்

அரச தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு தனியான குழுவாக அமரவுள்ளதாக அநுர பிரியதர்ஷன யாப்பா நாடாளுமன்றத்துக்குத் தெரிவித்துள்ளார்.

சுசில் பிரேமஜயந்த, ஜோன் செனவிரத்ன, நிமல் லான்சா, சுதர்ஷினி பெர்னாண்டோ புள்ளே மற்றும் பலர் சுயாதீனமாக செயற்படத் தீர்மானித்துள்ளனர் என அவர் தெரிவித்தார்.

அத்தோடு அமைச்சரவை அமைச்சர்கள் எவரும் சட்டரீதியாகத் தமது அமைச்சுப் பதவிகளை இராஜினாமா செய்யவில்லை என்றும் அநுர பிரியதர்ன யாப்பா சுட்டிக்காட்டினார்.

இதேவேளை, உதய கம்மன்பில, திரான் அலஸ், கெவிந்து குமாரதுங்க உள்ளிட்டோர் சுயாதீனமாக செயற்படுவார்கள் எனவும் முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ஸ தெரிவித்தர்.

# முஷாரப் எம்.பிக்கு 5 ஆயிரம் ரூபா தாளை நீட்டிய சாணக்கியன்!

நாடாளுமன்றத்தில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் எம்.பி. முஷாரப் இன்று உரையாற்றும் போது அவர் முன் 5 ஆயிரம் ரூபா நாணயத் தாளை நீட்டியபடி நின்றார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எம்.பி. சாணக்கியன்.

ஆளுங்கட்சியிலுள்ள அரசியல்கட்சித்தலைவர்கள் சுயாதீனமாகச் செயற்படுகின்றனர் என அறிவித்த பின்னர், நாட்டின் நிலைமை குறித்தும் அரசியல் கட்சிகளின் செயற்பாடுகள் குறித்தும் முஷாரப் எம்.பி பேசினார்.

அதன்போது அவர் முன் சென்ற சாணக்கியன் எம்.பி, ஐயாயிரம் ரூபா தாளை நீட்டியபடி அதனைப் பெற்றுக்கொண்டு பேசுமாறு சைகை செய்தார். இதன் போது சபையில் களேபரம் ஏற்பட்டது. ஆளுங்கட்சி எம்.பிக்கள் இதன்போது சாணக்கியனுக்கு எதிர்ப்பை வெளியிட்டனர்.



# குற்றவாளிகள் தப்பிக்கமுன்னர் விமானநிலையத்தை மூடுங்கள்!

## விஜித ஹேரத் கோரிக்கை

தற்போதைய சூழ்நிலையில் குற்றவாளிகள் நாட்டை விட்டு வெளியேறுவதை தடுக்க அதிகாரிகள் விமான நிலையத்தை மூட வேண்டும் என்று மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் வலியுறுத்தியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று (செவ்வாய்க்கிழமை) உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

# தெரிவுப் பரீட்சை பிற்போடப்பட்டது

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக உயர்பட்டப்படிப்புகள் பீடத்தினால் 09.04.2022 அன்று பிற்பகல் 1.30 – 3.30 மணிவரை நடாத்தப்பட இருந்த கல்வியியல் முதுமாணி (Master of Education) -2021/22 (அணி XIV) இற்குரிய மாணவர்களை தெரிவு செய்வதற்கான தெரிவுப்பரீட்சை நாட்டில் நிலவும் தற்போதைய அசாதாரண சூழ்நிலை காரணமாகவும் கணிசமான தேர்வு நாடிகள் வெளிமாவட்டத்தினராகவும் காணப்படு கின்ற காரணத்தினால் பிற்போடப்படுவதாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பதிவாளர் அறிவித்துள்ளார்.

இப்பரீட்சைக்கான புதிய திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

# சட்டமா அதிபர் பணிமனையை சுற்றிவளைத்த சட்டத்தரணிகள்





சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு முன்னாள் சட்டத்தரணிகள் குழுவொன்று நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டது.

தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்து தற்போதைய ஆட்சியை இராஜினாமா செய்யுமாறு கோரி அவர்கள் போராட்டத்தை நடத்தினர்.

புதுக்கடை நீதிவான் நீதிமன்றத்திற்கு முன்பாக இந்தப் போராட்டம் நடந்தது.

சில முக்கியமான வழக்குகளை வாபஸ் பெறும் சட்டமா அதிபரின் முடிவுக்கு எதிராக அவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

## அவசரகாலச் சட்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இந்த அவசரகால நிலைமைப் பிரகடனம் தொடர்பான பிரேரணைக்கு நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை ஆதரவைத் திரட்ட முடியாது என்ற இக்கட்டு நிலையிலேயே அவசரகால நிலைமையைத் தொடரும் தம் முயற்சியில் இருந்து அவர் வெற்றிகரமாகப் பின்வாங்கினார் என விடயமறிந்த வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

தற்போதைய பொருளாதார நெருக்கடிகளை அடுத்து அரசுக்கு எதிரான மக்களின் எழுச்சி ஆர்ப்பாட்டங்கள் மிகத் தீவிரமடைந்து வருகின்றன. அவற்றை எதிர்கொள்வதற்காக பொதுசனப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் அவசரகால நிலையைப் பிரகடனம் செய்தார் ஜனாதிபதி.

எனினும், அத்தகைய பிரகடனம் செய்யப்பட்டு அடுத்த 14 நாள்களுக்குள் அதற்கு நாடாளுமன்றத்தில் விசேட தீர்மானம் மூலம் அனுமதி பெற வேண்டும். அதன் பின்னர் ஒவ்வொரு மாதமும் அத்தகைய நாடாளுமன்றத் தீர்மானங்கள் மூலம் அது நீடிக்கப்பட வேண்டும். இல்லையேல் அவசரகால நிலைமை காலாவதியாகிவிடும்.

கடந்த முதலாம் திகதி பிரகடனப்படுத்தப்பட்ட அவசரகால நிலை ஏற்பாடுகளின் கீழ்தான் கடந்த சனிக்கிழமை இரவு முதல் திங்கள் காலை வரை ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டமையுடன் ஞாயிறன்று சமூக ஊடக பரிமாற்றங்களுக்குத் தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு மூலம் முடக்கமும் மேற்கொள்ளப்பட்டது.

இந்த அவசரகால நிலைமைப் பிரகடனம், ஊரடங்கு உத்தரவு, சமூக ஊடக முடக்கம் ஆகியவற்றுக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் நாளை உயர்நீதிமன்றத்தில் பரிசீலனைக்கு எடுக்கப்பட இருக்கையில், நேற்றிரவு இந்த அவசரகால நிலைமையை – அதைக் கொண்டு வந்த வேகத்திலேயே – வாபஸ் பெற்றிருக்கிறார் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ.

அரசு பிறப்பித்த அவசரகால நிலையை அங்கீகரிப்பது தொடர்பான பிரேரணை நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை இல்லாமல் தோற்கடிக்கப்பட்டால், அதுவும் அரசு மீதான நம்பிக்கைப் பிரேரணை தோற்றமை போன்ற நிலைமையை ஏற்படுத்தி, அரசை பதவி இழந்தமை மாதிரியான கட்டத்தை – கட்டாயத்தை – உருவாக்கி விடும் எனச் சுட்டிக் காட்டப்படுகின்றது.

இதனால் தானே தனது அரசை இந்த நெருக்கடி சமயத்தில், நம்பிக்கை வாக்கெடுப்புக்கு முன்னால் நிறுத்தும் கட்டாயத்தை ஏற்படுத்தாமல், தவிர்ப்பதற்காக இந்த அவசரகால நிலையை வாபஸ் பெற்றிருக்கின்றார் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ.

இதன்மூலம், நாடாளுமன்றத்தில் நம்பிக்கை வாக்கெடுப்பை எதிர்கொள்ளும் ஒரு கட்டாயத்தை தந்திரோபாயமாக அரசு தவிர்த்திருக்கின்றது எனச் சுட்டிக் காட்டப்படுகின்றது.

எனினும் மக்கள் போராட்டம் தீவிரமடைந்து வரும் இச்சூழலில் அவசரகால நிலைமைப் பிரகடனச் சட்ட ஏற்பாடுகள், ஒழுங்கு விதிகள் இல்லாமல் அந்தச் சிக்கல்களை அரசு எப்படிக் கையாளப் போகின்றது என்ற கேள்வியும் பாதுகாப்பு வட்டாரங்களில் எழுப்பப்பட்டுள்ளது.

---

## அரசுக்கு எதிரான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பிரதமர் இல்லத்தை சுற்றிவளைத்துப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனால் குறித்த பகுதியில் பதற்ற நிலை காணப்பட்டது.

---

## கோட்டாபய அரசு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அவர் சுட்டிக்காட்டினார்.

இடைக்கால அரசு என்ற மோசடிக்கு ஒத்துழைக்கமாட்டோம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அத்துடன், நிறைவேற்று அதிகார ஜனாதிபதிமுறைமையைநீக்குவதற்கான சிறந்த தருணம் இது என்றும் குறிப்பிட்டு, அதற்கான யோசனையையும் அவர் முன்வைத்தார்.

## டீசலுக்கு வரிசை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் வயாவிளான் நோக்கி பஸ்ஸில் பயணித்துள்ளார். எனினும், தூக்கத்தில் அவர் வயாவிளானில் இறங்கவில்லை. பஸ் நடத்துநரும் கவனயீனத்தால் கவனிக்கவில்லை.

மீண்டும் பஸ் யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்து புன்னாலைக்கட்டுவனில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் டீசலுக்காக வரிசையில் காத்திருந்துள்ளது. அதனால் கீழே இறங்கிய பயணி நிலத்தில் அமர்ந்திருந்துள்ளார். அதனை அவதானிக்காத சாரதி பஸ்ஸை எடுத்த போது பயணி மீது ஏறியுள்ளது.

பயணி சம்பவ இடத்திலேயே உயிரிழந்த நிலையில் பஸ் சாரதி அங்கிருந்து தலைமறைவானார் என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் இறப்பு விசாரணைகளை முன்னெடுத்தமையுடன் உடற்கூற்றுப்பரிசோதனைக்கு அறிக்கையிட்டார்.

---

## அங்கஜனும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பெற்றுக்கொடுக்கவே நாம் விரும்புகின்றோம். அதன்படி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 14 உறுப்பினர்கள் நாடாளுமன்றத்தில் சுயாதீனமாகச் செயற்படுவதாகத் தீர்மானித்துள்ளோம். கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன இந்த அறிவிப்பை நாடாளுமன்றத்தில் வைத்து நாட்டு மக்களுக்கு அறிவித்துள்ளார்.

– இவ்வாறு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்தார்.

ஊடகங்களுக்கு அவரால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள செய்திக் குறிப்பிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:–

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் யாழ். மாவட்டத்தில் அதிகூடிய வாக்குகளை ஆணையாக வழங்கிய என் மாவட்ட உறவுகளும், தற்போதைய பொருளாதார நெருக்கடியில் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர். கடந்த வாரங்களில் மக்களை நேரில் சந்தித்து அவர்களது நிலைப்பாடுகளை நேரில் கேட்டறிந்து கொண்டேன்.

நாட்டின் பொருளாதார நெருக்கடி நிலையில், மக்களால் முன்னெடுக்கப்படும் போராட்டங்களை நான் மதிக்கின்றேன். எங்கள் உறவுகள் இன்று பசியோடு இருக்கின்றார்கள். நீண்ட வரிசையில் நின்று பொறுமையிழந்து இன்று வீதிகளில் போராட ஆரம்பித்துள்ளனர்.

கடந்த இரண்டு ஆண்டுகளாக நாட்டை முற்றாக முடக்கிய கொரோனா பாதிப்பின் உடனடி எதிர்வினைகளை இப்போதைய பொருளாதார நெருக்கடி நிலையினூடாக நாம் எதிர்கொண்டுள்ளோம்.

நாட்டில் ‘இல்லை’ என்கிற வார்த்தையே இப்போது எங்கும் கேட்கின்றது. இது இந்தத் தேசத்துக்கு மிகவும் சவாலான காலப்பகுதியாகும். இதிலிருந்து நாம் மீண்டேயாக வேண்டும்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியானது அரசின் பங்காளிக் கட்சியாகப் பொறுப்புணர்வுடன் செயற்பட்டு வந்தது. அரசின் செயற்பாடுகளுக்குரிய அழுத்தங்களை நாட்டின் சிரேஷ்ட கட்சியாக நாம் பிரயோகித்தே வந்தோம்.

நாட்டின் எதிர்க்கட்சி செயல் திறனற்று இருந்த நிலையில் அரசை வழிப்படுத்தும் கட்சியாக நாம் பாடுபட்டோம். ஆனால், இப்போது அனைத்தும் எல்லைமீறி விட்டது.

நாட்டின் நிகழ்கால பிரச்சினைக்குரிய தீர்வை மக்கள் கோரி நிற்கிறார்கள். அதனூடாக தமது எதிர்காலத்தை வளர்த்தெடுக்க அவர்கள் விரும்புகின்றார்கள். தங்கள் குழந்தைகளோடு போராட்டத்தில் ஈடுபடும் மக்களின் நோக்கம் அதுவாகவே உள்ளது.

எனவே, பிரதான எதிர்க்கட்சி செயற்படுவது போன்று நாட்டை மீட்டெடுப்பதற்கான தீர்வுகளின்றி, வெறுமனே எதிர்ப்பு அரசியலை மாத்திரம் மேற்கொள்வதை நாம் விரும்பவில்லை. மக்களின் இயல்பு வாழ்க்கையை மக்களுக்குப் பெற்றுக்கொடுக்கவே நாம் விரும்புகின்றோம்.

அதன்படி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 14 உறுப்பினர்கள் நாடாளுமன்றத்தில் சுயாதீனமாகச் செயற்படுவதாகத் தீர்மானித்தோம். கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன இந்த அறிவிப்பை நாடாளுமன்றத்தில் வைத்து நேற்று நாட்டு மக்களுக்கு அறிவித்தார்.

எனது யாழ். மாவட்ட உறவுகள், போருக்குப் பின்னதான அபிவிருத்திகளையும், வாழ்வாதார மேம்பாட்டையும் எதிர்நோக்கியுள்ள நிலையில் இந்தப் பொருளாதார நெருக்கடி நிலை அவர்களை மேலும் பாதித்துள்ளது.

கடந்த 20 மாதங்களாக யாழ். மாவட்ட அபிவிருத்திக்குழுத் தலைவராகச் செயற்பட்டு எம்மக்களுக்கான அபிவிருத்திகளையும், வாழ்வாதார மேம்பாடுகளையும், அரசின் திட்டங்களை அதிகப்படியாகவும் எமது மண்ணுக்குப் பெற்றுக் கொடுத்துள்ளேன்.

தேசிய பாடசாலைகள், சமுர்த்தி சௌபாக்கியா உற்பத்தி கிராமங்கள், இளைஞர் மேம்பாட்டு திட்டங்கள், வாழ்வாதார திட்டங்கள், குடிதண்ணீர் வசதிகள், விவசாயத்திட்டங்கள் எனப் பல்வேறு பணிகளை மக்களின் ஆதரவோடு நாம் முன்னெடுத்துள்ளோம்.

எங்கள் மக்களுக்கென்று தனியாக கனவுகள் உண்டு. நாட்டின் ஏனைய மாவட்டங்களை விட எம் மக்களின் தேவைகள் தனியானவை. போரால் இழந்தவற்றை மீட்கும் இலக்கோடு அவர்கள் பயணிக்கின்றார்கள். கல்வி, தொழில், வர்த்தகம், விளையாட்டு, பொருளாதாரம் என அவர்களுக்கான தனித்துவமான கனவுகள் உள்ளன.

அந்த மக்களின் கனவுகளை நிறைவேற்றுவதை என் கனவு யாழ் எனக் கொண்டு மக்கள் பணி ஆற்றுவதற்கான ஆணையை மக்கள் எனக்கு வழங்கியிருந்தனர். அதனை நிறைவேற்றும் பணியில் நேர்மையோடு நாம் செயற்பட்டோம். தொடர்ந்தும் செயற்படுவோம்.

என் கனவு யாழ் ஒரு நீண்ட பயணம். மக்களின் தேவைகள் ஒவ்வொன்றும் இதற்குள் அடங்கும். அவற்றை நிறைவேற்றுவதே மக்கள்பிரதிநிதியான எனது பொறுப்பு. அந்தப் பொறுப்புக்கூறலின் அடிப்படையிலும், மனச்சாட்சிக்கு நேர்மையாகவும் என் மாவட்ட உறவுகளோடு எப்போதும் நிற்பேன்; அவர்களின் குரலாகச் செயற்படுவேன் என உறுதிமொழிகின்றேன்.

இப்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி நிலையிலிருந்து மீண்டு வருவதற்கான திட்டங்களையும் முன்மொழிவுகளையும், ஆதரவுகளையும் கல்வியாளர்கள், பொருளாதார வல்லுநர்கள், தொழில்வல்லுநர்கள், புலம்பெயர் சமூகம் என அனைத்துத் தரப்பினரும் முன்வைத்து நாட்டை மீட்டெடுக்க ஒன்றிணையுமாறு கேட்டுக்கொள்கிறேன் – என்றுள்ளது.

---

## பெரும்பான்மையை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இது தொடர்பில் மேலும் கூறியதாவது:–

நாடாளுமன்றத்தில்பெரும்பான்மைப் பலம் அரசு வசம் உள்ளது. எனவே, ஆட்சி தொடர்பில் சிக்கல் எழவில்லை. அவ்வாறு அரசுக்குப் பெரும்பான்மை இல்லையெனில், அது நிரூபிக்கப்பட வேண்டும்.

அவ்வாறு நிரூபித்தால் நாடாளுமன்றத்தைக் கலைத்துத் தேர்தலுக்குச் செல்லாம். இல்லையேல் பெரும்பான்மையை நிரூபித்து எந்தக் கட்சியும் புதிய ஆட்சியைக் கோரலாம்.

அரசமைப்பில் உள்ள வழிகள் இவை தான். அதனைச் செய்வதற்கு நாம் தயார் – என்றார்.

---

## நெருக்கடி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கட்சித் தலைவர்கள் கூட்டத்திலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

## எந்தத் தரப்புடனும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கரிசனை கொள்ளமுடியும் . இல்லையேல் எந்த மாற்றமு எம்மக்களுக்கு அர்த்தமற்றதாகிவிடும்.

நாம் துல்லியமாகக் கணித்தபடி கடுமையான பொருளாதாரச் சிக்கலினாலும் உள்ளக அரசியல் மாற்றங்களினாலும் பாரிய மக்கள் போராட்டம் வெடித்துள்ளது. தாம் பெரும்பான்மையாக வாக்களித்துத் தெரிவு செய்த அரசாங்கத்தை அந்த மக்களே எழுச்சி கொண்டு துரத்தி அடிக்கும் சூழ்நிலை பிறந்துள்ளது. இந்த நேரத்தில் தற்காலிக அரசாங்கமா, இடைக்கால அரசாங்கமா காபந்து அரசாங்கமா எனப் புதிய ஏற்பாட்டினை மேற்கொள்வதற்கு அரசும் எதிர்க்கட்சிகளும் முனைந்துள்ளன.

மாறி வந்திருக்கும் இந்த அரசியல் சூழ்நிலையை தமிழர் தரப்பு எப்படி கையாளப் போகிறது என்பதில்தான் எமது இனத்தின் எதிர்காலம், தீர்வு என்பன தங்கியுள்ளன.

எம்மினம் முகம் கொடுத்திருக்கும் அன்றாட பிரச்சினைகளுக்கும், நீண்ட காலமாக கோரி வரும் அரசியல் தீர்வுக்கும் முடிவை எட்ட இந்தச் சூழ்நிலையை சரியான முறையில் நாம் கையாள வேண்டும்.

அந்தந்த தரப்புக்களோடு பேச்சு வார்த்தை நடத்தக் கூடாது என்பதோ, அழைத்தவுடன் சென்று பேசுவதோ, ஓரிருவர் முடிவிலோ அல்லாமல் சரியான முறையிலே கையாளுவது தற்பொழுது தேவையாக உள்ளது

கடந்த சில நாள்களுக்கு முன்னர் ஜனாதிபதியுடனான பேச்சுவார்த்தைக்கு கூட்டமைப்புக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. அதில் கலந்து கொள்வதற்கு முன்னர் நிறைவேற்ற வேண்டிய சில நிபந்தனைகளை ரெலோ கோரியிருந்தது அனைவரும் அறிந்ததே. அரசியல் கைதிகள் விடுதலை, எமது பிரதேசங்களில் முன்னெடுக்கப்படும் காணி அபகரிப்பை உடனடியாக நிறுத்துதல், அபகரிக்கப்பட்ட காணிகளை விடுவித்தல், சர்வதேச ஏற்பாடுகளுக்கு அமைய காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான விசாரணை மற்றும் நீதி, அரசியல் யாப்பில் உள்ள அதிகாரப் பகிர்வினை உடனடியாக நடைமுறைப்படுத்துதல் என்பன மிகக் குறைந்த பட்ச விடயங்களாக கருதப்படுகின்றன. நாடாளுமன்றத்தில் சாதாரண பெரும்பான்மையோடு இவற்றை நிறைவேற்ற முடியும்.

ஆகக்குறைந்தது இந்த நிபந்தனைகளை நிறைவேற்ற உறுதியான நிலைப்பாட்டை வெளிப்படுத்தும் தரப்புடன் பேசுவது பற்றிய பரிசீலனையை நாம் மேற்கொள்ள முடியும். இதுவே எம்மினம் சார்ந்து செய்யக்கூடிய சரியான அரசியல் நகர்வாக தற்போதைய சூழ்நிலையில் அமையும். – என்று உள்ளது.

---

## கோட்டா அரசுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

என்று ஐக்கிய மக்கள் சக்தியின் வட்டுக்கோட்டை தொகுதி அமைப்பாளர் முருகவேல் சதாசிவம் அழைப்பு விடுத்துள்ளார்.

---

## கொட்டகலையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஒன்று இடம்பெற்றது.

ஆர்ப்பாட்டக்காரர்கள் சவப்பெட்டியை வைத்து அதிகரித்த விலைகளை வரிசையாக ஒப்பாரி வைத்துக் கூறி, தப்படித்து, அழுது, நினைவு கூர்ந்தமையுடன் ஆட்சியாளர்கள் ஒழிய வேண்டும் எனவும் கோசமிட்டனர்.

அதனை தொடர்ந்து ஆர்ப்பாட்ட காரர்கள் சவப்பெட்டியைச் சுமந்த வண்ணம் நாட்டின் ஜனாதிபதி மற்றும் அமைச்சர்கள் ஒழிய வேண்டும் எனக் கோசமிட்டவாறு கொட்டகலை டிரேட்டன் ஆலயத்திற்கு அருகாமையிலிருந்து கொட்டகலை ரயில்வேக் கடவை வரை வந்து அதனைத் தொடர்ந்து கலைந்து சென்றனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் கொட்டகலை பிரதேசத்தில் உள்ள தோட்டத்தொழிலாளர்கள், இளைஞர்கள் மற்றும் யுவதிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

காலைக்கதிர் Kalaikkathir





# நாவலர் மாநாடு – 2022

## ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான் அவதரித்து 200 ஆண்டுகள் நிறைவு

## 1822 - 2022

### அறிமுகம்

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள் அவதரித்து இந்த ஆண்டோடு இரண்டு நூற்றாண்டுகள் நிறைவடைகின்றன. 1822இல் அவதரித்து 1879 வரை வாழ்ந்த அப்பெருந்தகை, அக்காலத்தில் சைவசமயம் எதிர் கொண்ட பெரும் சவால்களையெல்லாம் தன் அறிவாலும் ஆளுமையாலும் வெற்றிகரமாக எதிர் கொண்டு சைவசமயத்தை நிலைநிறுத்தினார்; சைவ சமுதாயத்தில் காணப்பட்ட அநாசார வழக்குகளை நீக்கி அதனைச் சீர்திருத்தம் செய்தார்; நூல்களை எழுதி வெளியிட்டும் சைவப் பாடசாலைகளை நிறுவியும் வறியவர்களுக்கு வேண்டிய வசதிகளை ஏற்படுத்தியும் சைவ சமுதாயத்துக்கு அறிவு புகட்டி சைவசமயத்திலும் தமிழிலும் பற்றுணர்ச்சி ஓங்கச் செய்தார்; சமுதாய ஒழுக்க விழுமியங்களை மதிக்கும் மனப்பான்மையை வளர்த்தார். சமயம், தமிழ், தமிழ்ச் சமுதாயத்தின் அரசியல் பொருளாதாரம் ஆகியன தொடர்பில் தீர்க்கதரிசனத்தோடு சிந்தித்துச் செயற்பட்டார்.

தமிழ் மொழியில் அமைந்த பழைய நூல்கள் பலவற்றைச் செவ்விய முறையிலே பதிப்பித்தும் புது நூல்களை எழுதியும் தமிழ்க்கல்வி விருத்தியுறச் செய்தார். சைவத்தின் பொருட்டு அவர் ஆற்றிய பணிகள் தமிழ்ப் பணிகளாயும் பரிணமித்தன. வசனநடை கைவந்த வல்லாளராக, கேட்டார்ப் பிணிக்க உரையாற்ற வல்ல நாவலராக அவரை மிளிரச் செய்தன. நூல்களைச் செவ்விய முறையில் வெளிப்படுத்திய நல்ல பதிப்பாளராக வரலாற்றில் அவர் இடம் கொண்டார். சைவம், தமிழ் என்பவற்றுக்கு அப்பால் இன, மதம் கடந்த நிலையில் எல்லாத் தரப்பினரதும் நீதிக்காகப் போராடும் சமூக ஆர்வலராகத் துலக்கம் பெற்றார். தன் ஆயுட்காலத்தில் அவர் ஆற்றிய பணிகள் எல்லோராலும் சாதிக்கக்கூடிய சாதாரண பணிகள் அல்ல. ஆறுமுகநாவலர் அவர்களின் வாழ்வு சைவத்துக்கும் தமிழுக்கும் சமுதாயத்துக்குமாக அர்ப்பணிக்கப்பட்ட வாழ்வு.

அத்தகைய ஆளுமையின் அம்சங்கள் வருங்காலச் சந்ததியினரும் அறிய வேண்டியவை; வாழ்வின் இலட்சியங்களாகக் கொள்ளப்பட வேண்டியவை. அந்த உணர்வினை ஊட்டவல்ல வகையிலே, அவர் அவதரித்து இரண்டு நூற்றாண்டு நிறைவடைவதை அடிப்படையாகக் கொண்டு, மாநாடு ஒன்றினை ஏற்பாடு செய்வதில் இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் பெருமிதம் உறுகின்றது.

### மாநாட்டின் நோக்கங்கள்

- வரலாற்றுப் புருடராகிய நாவலர் பெருமானின் சாதனைகளை அனைவரும் அறியச் செய்தல்.
- நாவலர் பெருமானின் படைப்புகளையும் அவர் பற்றிய படைப்புகள், ஆய்வுகளையும் ஆவணப்படுத்தல்.
- நாவலர் பெருமான் சைவத் தமிழ் உலகிற்காய் ஆற்றிய பணிகளின் பெருமையையும் அவற்றின் முக்கியத்துவத்தையும் உணர்ந்து அவற்றை வருங்காலத்திலும் முன்னெடுத்துச் செல்லும் மனப்பான்மையை இளம் சந்ததிக்கு ஊட்டுதல்.
- ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான் குறித்த பன்முக ஆய்வுகளுக்குக் களம் அமைத்துக் கொடுத்தல்.
- இளம் தலைமுறையினரிடையே, ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான் பற்றிய விழிப்புணர்வையும் மதிப்புணர்வையும் ஏற்படுத்துதல்.

### மாநாட்டின் சிறப்பு நிகழ்ச்சிகள்

எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் இடம்பெறவுள்ள இம்மாநாட்டில் அருட்பெரியார்களின் அருளுரைகள், சிறப்புப் பேச்சாளர்களின் பேருரைகள், ஆய்வுரைகள், கலைநிகழ்ச்சிகள் நாவலர் ஆவண இறுவட்டு வெளியீடு, நூல் வெளியீடுகள், மாநாட்டு மலர் வெளியீடு முதலான சிறப்பு அம்சங்கள் இடம்பெறவுள்ளன. மாநாட்டின் முக்கிய அம்சமாக ஆய்வரங்கு அமையும்.

### ஆய்வுப்பொருண்மை

**ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்களது ஆளுமையும் பணிகளும்**

**சமயப்பணி**
- சமய சீர்திருத்தம்
- சைவ தூசண பரிகாரம்
- கோவிற்பணி
- சைவசமய நூல் வெளியீடு
- புராண படனம்
- பிரசங்கம்
- சமயப் பிரசாரகர்களுக்கான கல்லூரி.

**கல்விப்பணி**
- பாடத்திட்ட உருவாக்கம்
- பாட நூலாக்கம்
- பாடசாலை ஸ்தாபிதம்
- கற்பித்தல்
- மாணவர் பரம்பரை உருவாக்கம்

**தமிழ்ப்பணி**
- பதிப்பு
- உரைநடையாக்கம்
- இலக்கணம்
- உரைப்பணி
- செய்யுள் இலக்கியங்கள்
- மொழிபெயர்ப்பு

**சமுதாயப்பணி**
- கஞ்சித்தொட்டித்தருமம்
- வேளாண்மைச்சங்கம்
- சமூக நீதிக்கான போராட்டம்
- சமுதாயத் தலைவர்களை உருவாக்கியமை

**நாவலர் ஆளுமை**
- ஆதீனங்களுடனான தொடர்பு
- சமகால அறிஞர்களுடனான தொடர்பு
- பத்திரிகைகளுடனான தொடர்பு
- பிரபுக்களுடனான தொடர்பு
- கிறிஸ்தவர்களுடனான தொடர்பு
- பண்ணிசைக்கு நாவலர் ஆற்றிய பணி

**ஆய்வுக் கட்டுரைகளைச் சமர்ப்பிக்க விரும்பும் சான்றோர்கள் கவனத்திற்கு:**

ஆய்வுக் கட்டுரைகளைச் சமர்ப்பிக்க விரும்புவோர், மேற்தரப்பட்ட ஆய்வுப் பொருண்மையில் தொடர்புபட்ட ஏதேனும் ஒரு தலைப்பில் ஆய்வுச்சுருக்கம் ஒன்றினை, தமிழ் மொழியில் - பாமினி எழுத்துருவில்-A4 அளவில் 2 பக்கங்களுக்கு மேற்படாமல் - 12 புள்ளி எழுத்து அளவில், கட்டுரையாளர் பெயர், முகவரி, மின்னஞ்சல் முகவரி என்பனவற்றுடன் **2022 ஏப்ரல் 25ஆம் திகதி**க்கு முன்னர்

**பணிப்பாளர்,**
**இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்,**
இல.248-1/1, காலி வீதி, கொழும்பு-4, இலங்கை.

என்ற விலாசத்துக்கோ அல்லது hindudir@gmail.com என்ற மின்னஞ்சலுக்கோ அனுப்பலாம். கடித உறையின் இடதுபக்க மூலையில் **"நாவலர் மாநாடு – 2022"** என குறிப்பிடப்படுதல் வேண்டும். தெரிவுக்குழுவின் தேர்விற்குப் பின்னர் ஆய்வரங்கு தொடர்பான மேலதிக விவரங்கள் அறியத்தரப்படும்.

248-1/1, காலி வீதி, கொழும்பு-04.
இலங்கை.

**அ. உமாமகேஸ்வரன்**
பணிப்பாளர், இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களம்

**இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களம் மற்றும் இந்துப் பண்பாட்டு நிதியம்**

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 06.04.2022இல் வெளியிடப்பெற்றது.